Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2035 ஐப்பசி-08 24-10-2004 ஞயிற்றுக்கிழமை ஓசை -249

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-10477) T.P: 024-222 4247


# இந்., சிறிலங்கா பாதுகாப்பு உடன்பாடு

# சமாதான முயற்சிகளைப் பாதிக்கும்!

## அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்

(லண்டன்)

**சிறிலங்காவிற்கும்–இந்தியாவிற்கும் இடையில் செய்து கொள் ளப்படவுள்ள படைத்துறை ஒத்துழைப்பு ஒப்பந்த மானது இலங்கையின் சமாதான முயற்சிகளைப் பாதிக்கும் என தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரிய ருமான அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.**



இந்தியா-சிறிலங்கா அரசிற்கும் இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்தாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ் ஒப்பந்தம் தொடர்பாகப் பேச்சுவார்த்தைகள் நடத்த கொழும்பு வந்திருந்த இந்திய பாதுகாப்புத்துறை அதிகாரிகள் பேச்சுக்களை முடித்து நாடுதிரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ் ஒப்பந்தமானது தற்போதைய சமாதான முயற்சிகளின் அடிப்படையாக இருக்கின்ற புலிகளுக்கும் சிறிலங்கா அரசிற்குமிடையிலான படைவலுச் சம

(14ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு எதிராக ஐ.தே.க சிலாபத்தில் போராட்டம்

ஐக்கிய தேசிய கட்சி, அரசிற்கு எதிராக நேற்று சிலாபத்திலும், அனுராதபுரத்திலும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு, மற்றும் அரசின் கொள்கைகளைக் கண்டித்து இவ் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது. மொத்தமாக ஐ.தே.கட்சி அரசிற்கு எதிராக 56 எதிர்ப்புப் போராட்டங்ளை நாடளாவிய ரீதியில் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ள நிலையில் இப் போராட்டம் இடம்பெற்றுள்ளது. இன்னும் மீண்டும் ஓர் போராட்டம் நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. (14ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு–கிழக்கு ஆளுநர் யாழ்ப்பாணம் விஜயம்

வடக்குகிழக்கு மாகாணசபை ஆளுனர் அசோக ஜெயவர்த்தன எதிர்வரும் மூன்றாம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார். இக்காலப்பகுதியில் இவா அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிடவுள்ளார்.யாழ்ப்பாணப் பாதுகாப்புத் திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதாகத் தெரியவருகிறது. (32)

## கல்வியைத் தனியார்மயப்படுத்துவதன் பின்னணியில் உலக வங்கி இல்லை

### உலகவங்கிப் பிரதிநிதி வலியுறுத்து

இலங்கையின் கல்வி முறையை தனியார் மயப்படுத்தப்படுவதன் பின்னணியில் உலக வங்கி இருப்பதாக வெளியான குற்றச்சாட்டை உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரால்ட் மறுத்துள்ளார். இலங்கையின் கல்வி அமைப்பை தனியார் மயப்படுத்துவது தொடர்பில் உலக வங்கி எந்தவிதமான முன்னெடுப்புக்களையும் மேற்கொள்ளவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். இலங்கையின் கல்வி அமைப்பைத் தனியார் மயமாக்கும் நடவடிக்கைக்கு உலக வங்கி ஒத்துழைப்பை வழங்குவதாகப் பல்கலைக்கழக மாணவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள பீற்றர் ஹரால்ட் இது ஆதாரமற்ற குற்றச்சாட்டு என்று கூறியுள்ளார். நாட்டில் நல்ல பிரஜைகளை உரு

(14ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரிப் படுகொலை நினைவு நாள் அனுஷ்டிப்பு

1987ஆம் ஆண்டு சாவசச்சேரிப் பகுதியில் இந்திய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட 12 பேரின் நினைவு நாள் இன்றாகும்.

சாவகச்சேரி சந்தைப் பகுதியில் இந்திய உலங்கு வானூர்தி நடத்திய தாக்குதலில் இப் படுகொலைகள் நிகழ்ந்தன. இந் நினைவு நாளையொட்டி இன்று காலை 10.00மணிக்குச் சாவகச்சேரி சந்தை உட்புறத்தில் நினைவு நாள் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

## தமிழ்ச்செல்வன் குழு இன்று வன்னி திரும்பும்!

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் மீண்டும் சுவிற்சர்லாந்துக்கு விஜயம் செய்துள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளில் மூன்று வார காலமாகச் சுற்றுப் பயணம் செய்து வரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான உயர் மட்டக் குழுவினர், நேற்று ஜேர்மனியின் பேர்லின் நகரில், அந்த நாட்டு அதிகாரிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர். இச்சந்திப்பை முடித்துக் கொண்டு சுவிற்சர்லாந்துக்குத் திரும்பியுள்ள இக்குழுவினர், அங்கிருந்து இன்று ஞாயிற்றுக்கிழமை கொழும்புக்குப் புறப்படவுள்ளதாகத் தெரிய

(14ஆம் பக்கம் பார்க்க)

## சிற்றூர்தி தடம்புரண்டது

மன்னார் தள்ளாடிப் பிரதான வீதியில் நேற்று மாலை வீதி விபத்து ஏற்பட்டது. உயிலங்குளத்திற்கு பிரயாணிகளை ஏற்றிச் சென்ற பேருந்து வண்டி ஒன்றும் இராணுவ தண்ணீர் பௌசர் ஒன்றும் ஒன்றை ,ஒன்றை விலகி செல்ல முற்பட்ட போது சிற்றூர்தி தடம் புரண்டதில் மருத்துவ தாதி ஒருவர் கடும் காயம் அடைந்துள்ளார். அதனை. விட சிலர் சிறிய

(14ஆம் பக்கம் பார்க்க)

## வவு.வில் சிங்கக் கொடியின்றி தேசிய வலைப்பந்தாட்டப் போட்டி

(செட்டிகுளம்)

சிங்கக் கொடி ஏற்றப்படாமல் வவுனியாவில் நேற்று தேசிய (மகளிர்களுக்கான) வலைப்பந்தாட்டம் (netball) ஆரம்பிமாகியுள்ளது தேசிய ரீதியிலான போட்டிகள் முதல் முறையாக வவுனியா



மாவட்டத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதை அடுத்து இந்தப் போட்டிகளில் சிங்கக்கொடி ஏற்ற கூடாது என்று ஏற்பாட்டாளர்களுக்குச் சிலர் தெரிவித்துள்ளனர். இதனை அடுத்து அந்தக் குழு வினருடன் நீண்டநேரமாகப் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றும் இணக்கத்திற்கு வரவில்லை காலை 9 மணிக்கு ஆரம்பமாக இருந்த நிகழ்வு 10.30 மணியளவிலையே ஆரம்பமானது. பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ள இருந்த சிறிலங்கா பிரதமரின் பாரியாரும் அகில இலங்கை வலை பந்து சங்கத்தலைவியுமான சுரோனி ராஜபக்ஷ வந்ததன் பின்னர் நிகழ்வுகள் ஆரம்ப (14ஆம் பக்கம் பார்க்க)

– இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெறும் –

## வன்முறைகளுக்குக் காரணமான குற்றவாளிகளை இனங்காணும் பரிமாணம் புலிகளிடம் இல்லை!

இராணுவம்,மற்றும் பொலிஸ் கட்டுப்பாட்டுப்பகுதியிலேயே அதிகளவான வன்முறைகளும் கொலைகளும் இடம் பெறுவதால் குற்றவாளிகளை இனம் காண்பதற்கான பரிமாணம் விடுதலைப் புலிகளிடம் இல்லையென தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் அவர்கள் ஜேர்மன் அரச பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

இவ்விடயத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கும், சமாதானச் செயற்பாட்டின் ஏற்பாட்டாளர்களுக்கும் தமது அமைப்பினால் ஆதரவை வழங்கிவிடுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தமது அமைப்பின் மீது வீண் பழியைச் சுமத்தாமல் பாரபட்சமற்ற விசாரணைகளை அரசு நடத்த வேண்டும் என்பதற்காகவே இங்கு ஆதரவு வழங்கப்படுகிறது. ஆனால் புலிகள் இயக்கத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலும், சமாதானச் செயற்பாடுகளை தகர்க்கும் வகையிலும் அரசின் காய்நகர்த்தல் இடம் பெறுவதாக வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையினால் இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பமுடியாது தொடர்ந்தும் அகதிமுகாம்களிலும்

(14ஆம் பக்கம் பார்க்க)

# கிளி. மாவட்ட வீதிகளில் இதுவரையில் ஒரு கி.மீ மட்டுமே தாரூற்றிபுனரமைப்பு

## - கிளி. மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் இது வரையில் ஒரு கிலோமீற்றர் மட்டுமே கல் போட்டு தாரூற்றி புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கு கோணாவில், ஸ்கந்த புரம் புதிய பாலத்திறப்பு விழாவில் கிளிநொச்சி அரச அதிபர்



கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கல்போட்டு தார்ஊற்றி பாவனையில் இருந்த 274-4 கிலோமீற்றர் தூரமான வீதிகள் யாவும் 1983 ஆம் ஆண்டின் பின்பு எவ்வித புரனமைப்பு வேலைகளும் மேற்கொள்ளப்படாததன் விளைவாக தார் வீதிகள் யாவும் கிரவலினால் செப்பனிடப்பட்டு மேற்படி வீதிகள்யாவும் கிரவல் வீதியாக மாறியுள்ளன.

தற்போது எற்பட்டுள்ள சமாதானச் சுழ்நிலையிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒருகிலோமீற்றர் தூரமான வீதி மட்டுமே கல்போட்டு தார் ஊற்றி செப்பனிடப்பட்டுள்ளது.

எனவே வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் வட கிழக்கு மாகாண பணிப்பாளர் கிளி.மாவட்டத்திலுள்ள வீதிகளை மீண்டும் தார்ஊற்றி செப்பனிடத் தன்னாலான முயற்சியினையும் மேற்கொள்ள வேண்டும் என வேண்டிக் கொண்டார்.

வீதி அபிவிருத்தி திணைக்கள வவுனியா பிராந்திய பொறியியலாளர் எந்திரி த..சிவராஜலிங்கம் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் பொதுச் சுடரினை தமிழீழ நிர்வாக சேவை திட்டப் பணிப்பாளர் சின்னப்பா மாஸ்ரர் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ நிர்வாக சேவை நடுவப்பணியகப் பொறுப்பாளர் இசையமுதன் ஏற்றி வைத்தார். மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து புதிதாகக் கட்டப்பெற்ற ஸ்கந்தபுரம் கோணாவில் வீதிப் பாலத்தினை கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஆ. காண்டீபன் சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

அடுத்து சிறப்புரையினை நிகொட் திட்டப் பணிப்பாளர் இலங்கானேசன், கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம், தமிழீழ நிர்வாக சேவை திட்டப்பணிப்பாளர், கிளிமாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினர் கிளிநொச்சி வீதி அபிவிருத்தி திணைக்கள நிறைவேற்றுப் பொறியியளாளர் வே.சிவயோகன் நன்றியுரை நிகழ்த்தினார்.அடுத்து புதுமுறிப்பு, கோணாவில் வீதியில் அமைக்கப்பெற்ற புதிய பாலத்தினை பிற்பகல் 5.30 மணிக்கு வீதி அபிவிருத்தி திணைக்கள வட கிழக்கு மாகாணப் பணிப்பாளர் எந்திரி த.சிவராஜலிங்கம் சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் நிகொட் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் மேற்படி புதிய பாலங்கள் அமைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## வரிவிளம்பரம்

### காணி விற்பனைக்கு

இடம்கணேசபுரம், (36/2) ஏக்கர்1/4 விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு முகவரி இலக்கம் 385, ஜெயந்திநகர், கிளிநொச்சி, (சந்தைமுன்பாக. (4926)

### தவறிவிட்டது

முழுப்பெயர் நடராசா குமுதினி, பிறந்த திகதி 1966.06.21, முகவரி 200, கோட்டைகட்டியகுளம், அக்கராயன், தே.அ.அ.இல 666733550v, புளியங்குளத்திற்கும், வட்டக்கச்சிக்கும் இடையில் தொலைந்துவிட்டது. இதனைக் கண்டு எடுப்பவர் வன்னியன் தொலைத்தொடர்பு நிலையம், வட்டக்கச்சி, கட்சன் வீதி, இராம நாதபுரம் என்ற முகவரிக்கு கொடுக்கவும். தகவல் குட்டி (4927)

## இரு சிறுவர்களுக்கு பாம்புக்கடி

(கண்டாவளை)

பாம்புக்கடிக்கு இலக்கான இரு சிறுவர்கள் தர்மபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். தர்மபுரம் 3ஆம் யூனிற்றைச் சேர்ந்த இ.குகநேசன் (வயது14), விசுவமடு புன்னை நீராவியைச்சேர்ந்த ம.மகாஜெனன் (வயது 6) ஆகிய இரு சிறுவர்களுமே விடுதியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருபவர்களாவர்.

அண்மையில் பலர் பாம்புக் கடிக்கு இலக்காகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (14)

## யாழ்.பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானக் கண்காட்சி

### - நான்கு தினங்கள் மாணவர்களுக்கு


யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் மாபெரும் விஞ்ஞானக் கண்காட்சி ஒன்று ஒக்ரோபர் 26ஆம் திகதி முதல் 30ஆம் திகதிவரை நடாத்தப்படவுள்ளது. இக்கண்காட்சி க.பொ.த.(உ.த) க.பொ.த.(ச.தா.) மாணவர்களின் அறிவு விருத்தியைப் பிரதான குறிக்கோளாகக் கொண்டது. இது காரணமாக 26ஆம் திகதிமுதல் 29ஆம் திகதி வரையான நான்கு தினங்கள் பாடசாலை மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 30ஆம் திகதி பொதுமக்கள் பார்வைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. தினமும் மு.ப.9.00 மணி தொடக்கம் பி.ப.3.00 மணிவரை கண்காட்சியைப் பார்வையிடலாம்.

இக்கண்காட்சி பாடசாலை மாணவர்களின் செயன்முறைப் பாடத் திட்டத்திற்கு அமைவாகவும், விஞ்ஞான தொழில்நுட்ப ஆர்வலர்களின் ஆவலைப் பூர்த்திசெய்யும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது. இதில் பௌதிகவியல், இரசாயனவியல், விலங்கியல், தாவரவியல், கணினி விஞ்ஞானம், கணித-புள்ளிவிபரவியல், மீன்பிடியியல் ஆகிய துறைகள் சார்ந்த கண்காட்சிப் பொருட்களும், செயன்முறைகளும் காண்பிக்கப்பட்டு விளக்கம் தரப்படவுள்ளது.

இக்கண்காட்சியைப் பார்வையிடுவதற்கு வெளிமாவட்டங்களான கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த பல பாடசாலைகள் தமது மாணவர்களை அழைத்துவரவிருப்பதாக முற்கூட்டியே பதிவுசெய்து தமது வருகையை உறுதிப்படுத்தியுள்ளன. வெளிமாவட்டங்களிலிருந்து இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் வருகைதரவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. இவ் விஞ்ஞானக் கண்காட்சி விஞ்ஞான பீடத்தின் முப்பதாவது ஆண்டு நிறைவில் நிகழ்வாக நடைபெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.



நகுலேஸ்வரி பண்பாட்டு மேம்பாட்டு நிறுவனம் வழங்கும் பேராசிரியர் என்.சண்முகலிங்கனின் "அம்மா..." இசைத்தட்டு, இசைநாடா வெளியீட்டுவிழா நேற்றுக்காலை 10.00 மணியளவில் நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது. இந்நாடாவின் முதற்பிரதியினை துணைவேந்தர் மோகனதாஸ் அவர்கள் வெளியிட்டுவைக்க எஸ்.சிவராசா அவர்கள் பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம். (படம் செல்வா)



யாழ்.பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்திற்குப் புதிய கட்டடம் நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுக்காலை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட வளாகத்தில் நடைபெற்றது. அப்போது யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்கள் அடிக்கல் நாட்டுவதை படத்தில் காணலாம் (படம் செல்வா)

## கிளி.நகர்ப்பகுதி வீதி விபத்தில் உந்துருளி ஓட்டுநர் காயம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி நகர்ப்பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வீதி விபத்து ஒன்றில் உந்துருளி ஓட்டுநர் காயமடைந்தார், உந்திருளியும், மோதுண்ட வாகனமும் சேதங்களுக்கு உள்ளாகின.

நேற்று மாலை 3.00 மணியளவில் கிளிநொச்சி முருகன்கோவிலுக்கு முன்பாக இடம் பெற்ற இவ் விபத்து பற்றித் தெரியவருகையில கிளிநகர்ப் பகுதியில் இருந்து சென்று கொண்டிருந்த "ஹயஸ்" வாகனத்துடன் பின்னால் சென்று கொண்டிருந்த உந்துருளி வாகனம் திரும்பிய வேளை மோதுண்டது. இதில் உந்துருளி ஓட்டுநரான கோவிந்தன்- நேசராசா- வயது.22 சாந்தபுரம் கிளிநொச்சி என்ற நபர் காயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.மேலதிக விசாரணைகளை தமிழீழ காவல்துறையின் வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (கு,தீ)


### காணி விற்பனைக்குண்டு

A-9 வீதி கந்தசுவாமி கோயிலுக்கு அருகாமையில் 15'X100' விஸ்தீரணம் கொண்ட கடைக்கட்டடமும் அத்துடன் பராசக்தி தியேட்டருக்கு அருகாமையில் வீடுடன் கூடிய காணியும் விற்பனைக் குண்டு.

தொடர்புகளுக்கு மு. ஆறுமுகன் எமேசன் ரோட், கிளிநொச்சி.

(5213)

### நாகபூசனி அம்மன் திருமணசேவை

எமது திருமண சேவையின் மூலம் சீதனம் கொடுக்க வசதி இல்லாமல் திருமணம் செய்யாதிருக்கும் பெண்கள், சீதனம் கொடுத்து திருமணம் செய்யக் கூடிய பெண்கள், சீதனத்தை எதிர்பாராமல் திருமணம் செய்யக்கூடிய ஆண்கள் மற்றும் சர்வதேச ரீதியில் வாழ்கின்ற ஆண், பெண் இரு பாலரின் ஜாதகங்களும் உள்ளன.

மற்றும் ஜாதகம், புகைப் படம் என்பவற்றுடன் நேரிலோ, அல்லது கடிதம் மூலமுமோ தொடர்புகொள்ளவும்.

NO.70
STATION R.D
VAIRAVAR PULIYAN KULAM,
VAVUNIYA
SRI LANKA.
T.P:- 077 6630207
024 2222301
FAX:- 024 2222150
E.mail:- SRI NAGAPUSANI AMMAN THIRUMANASAVAI @YAHOO.COM.

(சி-10580)

### கிளி/வலயக்கல்வி பணிமனை ஆதரவுடன் வட்டக்கச்சி ம.வி பொன் விழாவை முன்னிட்டு தமிழீழ மாணவர் அமைப்பு நடாத்தும் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான

## சதுரங்கப் போட்டி

போட்டி விதி முறைகள்:-

1. கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் மட்டும் பங்குபற்றலாம்.
2. 15வயது ஆண்,பெண்,19வயதுக்கு உட்பட்ட ஆண், பெண்,ஆகிய நான்கு (04)பிரிவுகளுக்குப் போட்டி நடைபெறும்.
3. ஒரு பிரிவில் ஏழு(07)பேர் பங்குபற்றலாம்.
4. சுயமாக தயாரிக்கப்பட்ட அதிபரின் உறுதிப்படுத்தலுடனான விண்ணப்பபடிவத்தை 28.10.2004இற்கு முன்னர் தமிழீழ மாணவர் அமைப்பின் நடுவகப்பணியகத்தில் அல்லது கிள/வட்டக்கச்சி ம.வி சதுரங்க கழகத்தில் ஒப்படைக்கவும்.
5. போட்டியின் போது வயதை உறுதிப்படுத்தும் சரியான ஆவணம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
6. போட்டிகள் யாவும் கிளி/வட்டக்கச்சி ம.வியில் நடை பெறும்.
7. போட்டிகள் 30.10.2004 காலை 8.00 மணிக்கு ஆரம்பித்து அதே நாளில் முடிவுறவும் உள்ளது.
8. சகல அணியினரும் மேற்குறிப்பிட்டுள்ள ஆரம்ப நேரத்தில சமுகமளிக்க வேண்டும். ஏனெனில் போட்டி விதிகள் ,சுற்று ஒழுங்குகள் என்பன குறித்து நேரில் அறிவுறுத்தப்படும்.
9. சதுர விளையாட்டு உபகரணங்கள் தாங்களே கொண்டு வர வேண்டும்.

தொடர்புகளுக்கு-
நடுவகப்பணியகம்,
தமிழீழ மாணவர் அமைப்பு,
பரவிப்பாஞ்சான்,
கிளிநொச்சி.

(5218)

-கரியமில வாயுவைக் கட்டுப்படுத்தும்-

# உலகளாவிய ஒப்பந்தத்திற்கு ரஷ்சியாவின் கீழ்சபை அங்கீகாரம்

**கரியமில வாயு போன்ற உலகில் வெப்பத்தை அதிகரிக்கச் செய்யும் வாயுக்கள் தொழிற்சாலைகளில் இருந்து வெளிவருவதைக் கட்டுப்படுத்த ஐக்கிய நாடுகள் சபை கொண்டுவந்த "குவேோட்டோ" ஒப்பந்தத்திற்கு ர'யாவின் கிழ் சபை அங்கீகாரம் அளித்துள்ளது.**

இதன் மூலம் உலகில் அதிகரித்து வரும் வெப்பநிலையைத் தடுப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக நம்பப்படுகின்றது.

"குவேோட்டோ" ஒப்பந்தத்தின் படி தொழில் வளர்ச்சி அடைந்த நாடுகள் 8 ஆண்டுகளுக்குள் கரியமில விசவாயுக்கள் போன்ற வெப்பத்தை அதிகரிக்கச் செய் யும் வாயுக்கள் வெளியிடுவதை - அதாவது 5.2 சதவீதத்திற்கு 1990 ஆம் ஆண்டிற்கு முன் இருந்த அளவுக்கு கட்டுப்படுத்த வேண்டுமென்றும் கூறப்பட்டது. இந்த ஒப்பந்தத்திற்கு ரஷ்ய சபை அங்கீகாரம் அளித்துள்ள நிலையில் மேல் சபையும் ரஷ்ய அதிபர் விளாடிமிர்புட்டினும் அங்கீகாரம் அளிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான் சபாநாயகர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வி

பாகிஸ்தானில், பாராளுமன்ற சபாநாயகர் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியடைந்தது. அதிபர் முஷாரப், இராணுவத் தலைவர் பதவியில் நீடிக்க வழி செய்யும் தீர்மானத்துக்கு சபாநசாயகர் சவுத்ரி அமீர் உசேன் அனுமதிய ளித்துள்ளார். இதைக் கண்டித்து அமீர் உசேன் மீது எதிர்கட்சியினர் கடந்த வாரம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தனர். இந் தத் தீர்மானத்தின் மீதான விவா தம் நேற்று முன்தினம் நடை பெற் றது. சபாநாயகரைப் பேசும்படி துணை சபாநாயகர் சர்தார் யாகூப் முதலில் அழைத்தார். இதனால எதிர்க்கட்சியினர் கோஷம் போட்டனர். அதன் பின் எதிர்கட்சியியை சேர்ந்த 107 உறுப்பினர்களும் இந்தத் தீர்மானத்தின் மீது விவாதம் நடத்த அனுமதிக்கும் படி கோரினர். நேரம் குறைவாக இருப்பதால், எதிர்கட்சியினர் பலருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதனால், எதிர்கட்சி உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தை புறக்கணித்தனர். இதைத் தொடர்ந்த சபாநாயகர் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியடைநதது



ஆப்கானிஸ்தானின் முதலாவது சனாதிபதித் தேர்தலில் தெரிவான பெரும்பான்மையைப் பெற்றிருக்கும் ஹமீட் கர்ஸாய் தனது வெற்றியைக் கொண்டாடுவதற்குத் தயாராகின்றார்.

## கம்போடியாவில் தீவிரவாதத்தை ஒடுக்க உலக நாடுகள் உதவி வழங்க வேண்டும்

*–தீவிரவாதத்தை கண்காணிக்கும் குழுத் தலைவர் வலியுறுத்து*

தீவிரவாதத்திற்கெதிரான நடவடிக்கைகளை கம்போடியா மேற்கொள்வதற்கு உலக நாடுகள் உதவி வழங்க வெண்டுமென்றும் அவ்வாறு உதவியினை வழங்காது விட்டால் தீவிரவாதிகளின் கேந்திர நிலையமாக கம்போடியா மாறி விடும் அபாயம் உண்டு என்று அல்ஹைதா மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களின் நடவடிக்கையைக் கண்காணிக்கும் குழுவின் தலைவர் ஹெரால்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் அல் ஹைதாவுடன் தொடர்புடைய தீவிரவாதக் குழுக்கள் தெற்காசிய நாடுகளில் அண்மைய காலப்பகுதிகளில் தற் கொலைக் குண்டுத் தாக்குதல் உட்பட பல தரப்பட்ட குண்டுத் தாக்குதல் நடததியுள்ளனர் என்று கூறிய ஹெரால்டோ 202 பேர் உயிரிழந்த பாலித்தீவு குண்டுத் தாக்குதல் முக்கியமானதென்றும் குறிப்பிட்டார்.



யப்பானின் ரோக்கியோவில் வெள்ளத்தால் சூழப்பட்ட வீதியொன்றில் கஷ்டத்துடன் நடந்து செல்லும் பெண்ணொருவர் கடந்த 25 ஆண்டுகளிற்குப் பின் இம்முறை யப்பானில் சூறாவழியினால் பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஈராக்கில் கெயார் நிறுவன பெண் அதிகாரி ஈராக்கியப் போராளிகளால் கைது

ஈராக்கில் கெயார் நிறுவனத்தின் அதிகாரி மார்கிரட் அஸனை ஈராக்கியப் போராளிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஈராக்கியரான இந்த குறிப்பிட்ட பெண் ஈராக், மற்றும் பிரித்தானிய நாடுகளுக்கான இரட்டைக் குடியுரிமையினைக் கொண்டிருந்தவர்என்பது குறிப்பிடத்தக்கது.

இவருடைய விடுதலை தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென்று கெயார் நிறுவனத்தின் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். மேலும் ஈராக்கியரான அப் பெண்ணை விடுதலை செய்து அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் அல் ஜசீரா தொலைக்காட்சி மூலமாக இந்த வேண்டுகோள் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை கெயார் நிறுவனம் அதன் அனைத்து செயற்பாடுகளையும் ஈராக்கில் இடைநிறுத்தியிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

## வரும் டிசம்பர் மாதத்திற்குள் தனி தெலுங்கானா மாநிலம்

**தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி இறுதிக்கெடு**

வரும் டிசம்பர் மாதத்திற்குள் தனி தெலுங்கானா மாநிலம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என் காங்கிரஸ் கட்சிக்கு தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி இறுதிக்கெடு விதித்துள்ளது. 'ஆந்திராவிலிருந்து தெலுங்கானா பகுதியைத் தனியாகப் பிரித்து தனி மாநிலம் உருவாக்கப்படும்' என காங்கிரஸ் கட்சி உறுதியளித்ததால், ஆந்திரா சட்டசபைத் தேர்தலில் தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி கட்சி, காங்கிரசுடன் கூட்டணி அமைத்தது. இந்தக் கூட்டணி சட்டசபை, லோக்சபா தேர்தலில் வென்று ஆட்சியைக் கைப்பற்றியது. ஆட்சி அமைத்த பிறகு தனி தெலுங்கானா கோரிக்கையை காங்கிரஸ் கட்சி கண்டுகொள்ளவில்லை. பல முறை வலியுறுத்தியும் முறையான பதிலை அளிக்கவில்லை. தனி தெலுங்கான மாநிலம் குறித்து ஆராய மாநிலங்கள் மறுசீரமைப்புக் கமிஷன் விரைவில் அமைக்கப்படும் என மத்திய அரசு அறிவித்தது. இதே கருத்தை ஆந்திர முதல்வப் ராஜசேகர ரெட்டியும் தெரிவித்தார். இதனால் ஏமாற்றமடைந்த தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி தங்கள் கோரிக்கையை நிறைவேற்ற இறுதிக்கெடு விதித்துள்ளது. இது குறித்து ஆந்திர மாநில சட்டசபையின் தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி கட்சிச் செயலாளர் ராஜேந்தர் கூறியதாவது. வரும் டிசம்பர் மாதத்திற்குள் தனி தெலுங்கானா மாநிலம் அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இதற்காக மூன்று ஆண்டுகள் வரை காத்திருக்கவும் தயார். ஆனால் எங்கள் இலட்சியம் தனி தெலுங்கானா மாநிலம் தான். இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி எங்கள் கட்சித் தலைவர் சந்திரசேகர் ராவ் காங்கிரஸ் தலைவர் சோனியாவைச் சந்தித்துப் பேச உள்ளார். தனி தெலுங்கானா மாநிலம் அமைய சோனியாதான் நடவடிக்கை எடுக்க வேண்டும். கூட்டணிக் கட்சியாக இருக்கும் காங்கிரஸ் தேர்தலுக்கு முன் ஒப்புக் கொண்டபடி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். கூட்டணி தர்மத்தை மாற்ற மாநிலங்களில் பின்பற்றும் காங்கிரஸ், ஆந்திராவிலும் இதை அமுற்படுத்த வேண்டும். இவ்வாறு ராஜேந்தர் கூறினார்.

## நேபாள அரசு–மாவோயிஸ்ட்டுகள் போர் நிறுத்தத்திற்கு வரவேற்பு

(ஜெனீவா)

நேபள அரசும் மாவோயிஸ்ட்களும் செய்து கொண்ட ஒன்பது நாள் தற்காலிகப் போர் நிறுத்த உடன்பாட்டை வரவேற்பதாக ஐ.நா.பொதுச் செயலாளர் கொபி அனான் கூறியுள்ளார். நோபாளத்தில் கடந்த வியாழனில் தஸரா பண்டிகைக் கொண்டாட்டங்கள் தொடங்கியதால் ஒன்பது நாட்களுக்கு அரசுக்கு எதிரான தாக்குதல்களை நிறுத்துவதாக மாவோயிஸ்ட்டு தீவிரவாதிகள் அறிவித்தனர் இதனையடுத்து அந்நாட்டு அரசும் இராணுவ தாக்குதல்கள் ஒன்பது நாட்களுக்கு நடத்தப்படாது என்று அறிவித்தது.

இந் நிலையில், தற்காலிக போர் நிறுத்தத்தை வரவேற்பதாக ஐ.நா.சபைப் பொதுச் செயலாளர் கொபி அன்னான் கருத்துத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறும்போது,"உலகிலுள்ள பல நாடுகளில் அமைதியற்ற நிலை நீடித்து வருகிறது. அனைத்து நாடுகளும் அமைதியான முறையில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முன்வர வேண்டும். நேபாளத்தில் மாவோயிஸ்ட்டுகளும், அரசும் செய்து கொண்டுள்ள தற்காலிக போர் நிறுத்தத்தை வரவேற்கிறேன். இந்த நிலை நீடிக்க வேண்டும். நிரந்தரமாக போர் நிறுத்தத்தை கை விட்டு அமைதி முறையில் பேச்சு வார்த்தை நடத்தி நிரந்தர தீர்வு காண வேண்டும். இதற்கு ஐ.நா.வின் ஆதரவு எப்போதும் இருக்கும்" என்றார்.

## மகாராஷ்டிர முதலமைச்சர் பதவி வழங்காவிடின் வெளியிலிருந்தே ஆதரவு வழங்கப்படும்

*தேசியவாத காங்கிரஸ் அறிவிப்பு*

மகாராஷ்டிர சட்டப்பேரவைத் தேர்தலில் அதிக இடங்களை வென்றுள்ள தேசியவாத காங்கிரசிற்கு முதலமைச்சர் பதவி தரப்படா விட்டால் அம் மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சி அமைக்க வெளியிலிருந்து ஆதரவு தருவதென்ற தனது முடிவில் மாற்ற மேதும் இல்லையென்று தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வேளையே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்

காங்கிரஸ் கட்சியுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களில் இந்த விடயம் தெளிவாக்கப்பட்டுள்ளதாகவும் கூறியதுடன் காங்கிரஸ் கட்சியுடன் தேசியவாத காங்கிரஸ் இணையும் பேச்சுக்கே இடமில்லையென்றும் சரத்பவார் கூறினார்.

இதனிடையே மகாராஷ்டிர முதலமைச்சர் பிரச்சினைக்கு இன்னமும் இரண்டொரு நாட்களில் தீர்வு காணப்படும் என்று காங்கிரஸ் தரப்பிலும் தேசியவாத காங்கிரஸ் தரப்பிலும் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விபத்தில் 15 பேர் பலி

அருணாச்சலப் பிரதேச மாநிலம் பாபுன்பரே மாவட்டத்தில் பாரஊர்தி ஒன்று பள்ளத்தாக்கில் உருண்டு விழுந்து 15 பேர் பலியாயினர். 20 பேரை ஏற்றிக்கொண்டு பாரஊர்தி ஒன்று சென்றது. மலைப்பகுதியில் சென்றுகொண்டிருந்த போது பாரஊர்தி திடீரென நிலை குலைந்து அருகில் உள்ள பள்ளத்தில் உருண்டு வீழ்ந்தது. இதில் 15 பேர் பலியாயினர். மற்றவர்கள் காயமடைந்தனர்.

# அக்கராயன் கிழக்கு பிரதேச மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்க!

### -இருபது வருடங்களுக்கு மேல் தொடரும் அவலம்

(அலுவலக செய்தியாளர்)

**அக்கராயன் கிழக்கு பிரதேச மக்கள் கடந்த பலவருடங்களாக எவ்வித அடிப்படைத் தேவைகளும் கிடைக்கப்பெறாத நிலையில் பலத்த கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரியவந்துள்ளது.**

கடந்த 1977, 1983ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற இனக்கலவரத்தின் காரணமாகத் தென்பகுதியிலிருந்து புலம்பெயர்ந்து மேற்படிப் பகுதியில் வந்து குடியமர்ந்துள்ள 92 மக்கள் அன்றாட கூலித் தொழிலையே நம்பி ஜீவனோபாயத்தினை மேற் கொண்டு வருகின்றனர்.

இக் கிராமத்தில் எண்பதிற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்ற பொழுதிலும் வீட்டு வசதிகள் அற்ற நிலையில் தற்பொழுது கீற்றுக்குடிசைகளிலேயே இவர்கள் வாழ்ந்து வருகின்றமையினைக் காணக்கூடியதாகவுள்ளது.

சிறார்கள் கல்வியினை மேற்கொள்ளக்கூடிய வகையில் முன்பள்ளி மற்றும் கிராமத்தின் தேவைகளை முன்னெடுக்கக் கூடிய வகையில் கிராம அபிவிருத்திச் சங்கம் என்பன அற்றநிலையிலேயே தற்போதும் மேற்படி கிராமத்து மக்கள் வாழ்ந்து வருகின்றமை கவலை தரக்கூடிய விடயமாக அமைந்துள்ளது.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக பொதுக்கிணறுகூட அமைக்கப்படாத நிலையில் குடிநீரிற்கென சிலகிலோ மீற்றர் தூரம் சென்றே குடிநீரைப்பெறவேண்டிய நிலையிலும் மற்றும் மலசலகூட வசதிகள் அற்ற நிலையிலேயே வாழ்ந்து வருவதுடன் பெரியோர்கள் முதல் சிறார்கள்வரை பலத்த சிரமங்களுக்கு மத்தியிலேயே போக்குவரத்தினை மேற்கொண்டு வருவதாகவும் தெரியவந்துள்ளது.

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் பல இருந்தும் 20வருட காலமாக எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி வாழும் அக்கராயன் கிழக்கு குடியிருப்பு வாழ்மக்களுக்கு எதுவித உதவிகளையும் மேற்கொள்ள இதுவரை ஏதாவது ஒரு நிறுவனம் கூட முன்வரவில்லையேயென அப்பகுதி கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த 20வருடங்களுக்கு மேலாக மேற்படி கிராமத்தில் குடி யிருந்து வருகின்ற பொழுதிலும் இதுவரை இவர்களுக்கு குடியிருப்பு காணிக்கான அனுமதிப்பத்திரங்கள் கூடக் கிடைக்கப் பெறவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது. (சோ)

## விதை நெல் உற்பத்தி மழையால் அழிந்தது!

(கிளிநொச்சி)

ஆண்டான்குளம் விதைநெல் உற்பத்தி சங்கத்தினரால் விதை நெல் உற்பத்திக்கு என செய்கை பண்ணப்பட்ட வயல்கள் அண்மையில் பெய்த மழை காரணமாக அழிவடைந்துள்ளதாக தெரியவருகிறது. (15)

## வட்டக்கச்சி காவல் பணிமனையின் நடமாடும் விசாரணை செயலகம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி காவல் பணிமனையினர் புளியம்பொக்கணை பொது நோக்கு மண்டபத்தில் கடந்தபுதன்கிழமை முதல் புளியம்பொக்கணை கரவெட்டித்திடல், கண்ணகை அம்மன் கோவிலடி, நாகேந்திரபுரம் போன்ற பிரதேசங்களுக்கு உட்பட்ட மக்களின் நலன்கருதி முறைப்பாடுகளுக்கு உரிய நடவடிக்கைகளை பொறுப்பதிகாரி கி.கின்ஸ்சிலிதாஸ் தலைமையில் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேபோன்று நடமாடும் விசாரணை செயலகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை தொடக்கம் மாலைவரை கண்டாவளைப் பிரதேசத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கு கண்டாவளைப் பிரதேச மக்களை வருகை தருமாறு வட்டக்கச்சி காவல் பணிமனையினர் கேட்டுள்ளனர். (12)



காணி அலுவல்களை மேற்கொள்வதற்காக கரைச்சி பிரதேச செயலக காணி அலுவலகத்திற்கு கடந்த புதன் கிழமையன்று சென்றிருந்த மக்கள் மழைகாரணமாக அலுவலக தாவாரங்களில் ஒதுங்கி நிற்பதனை படத்தில் காணலாம். (படம் சோதி)

## கலந்துரையாடல

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட அனைத்து தையல் உரிமையாளர்களுக்குமான கலந்துரையாடல் 22.10.2004 பி.பகல் 3.00 மணிக்கு அப்பகுதி அரசியல் துறை செயலகத்தில் பிறையாழன் தலைமையில் நடைபெற்றது. மேற்படி கலந்துரையாடலில் மாவீரர் நாள் நிகழ்வை மிகவும் சிறப்பாக கொண்டாடுவதும் சமகால அரசியல் பற்றியும் முல்லை மாவட்ட தொழிற்சங்க பொறுப்பாளர் இ.பிறையாழனால் எடுத்துக் கூறப்பட்டது. (08)

## பட்டதாரிகளுக்கான 2ஆம் கட்ட சேவை முன் பயிற்சி ஆரம்பம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் இருந்து இரண்டாம் கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட 41 பட்டதாரிகளுக்கு சேவை முன் பயிற்சி வியாழக்கிழமை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமான இப்பயிற்சிநெறியின் ஆரம்ப நிகழ்விற்கு மன்னார், வவுனியா மாவட்டங்களின் பிராந்திய ஆணையாளர் பத்மநாதன் தலைமை தாங்கினார். இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (10)

## அக்கராயன்குள விவசாயிகளுக்கு விதைநெல் உள்ளீடுகள் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

உலக விவசாயத்திட்டத்தின் நிதி உதவியுடன் கிளிமாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் கிளி. மாவட்ட கமக்கார சம்மேளனம் நேற்று முன்தினம் அக்கராயன் பிரதேசத்தில் அக்கராயன் குளத்தின் கீழ் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் 100 பேருக்கு தூய விதை நெல் உற்பத்தித்திட்டத்தின் கீழ் ஒரு ஏக்கருக்கான விதை நெல்லும் அதற்கான இரசாயன உள்ளீடுகளும் வழங்கியது

காலை 9.00 மணிக்கு அக்கராயன் கமநல சேவை நிலையத்தில் ஆரம்பமாகிய இந்நிகழ்விற்கு கிளி மாவட்ட கமக்கார சம்மேளன செயலாளர் ம.புவனேந்திரன் தலைமை வகித்தார். தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிளிநகர் பிரதேசப்பொறுப்பாளர் இ.மங்களேஸ், அக்கராயன் பிரதேச இணைப்பாளர் பி.பாஸ்கரன், கமநல உத்தியோகத்தர் திருமதி பு.சுலோசனா ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகள் வழங்கினார்கள் இத்திட்டத்தின் கீழ் திருவள்ளுவர், ஐயனார்,. பிள்ளையார், நாகதம்பிரான் திட்டக் குழுக்களின் கீழ் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் பயன் பெறுகின்றனர். (தீ)



கிளிநொச்சியை தலைமைப்பணிமனையாகக் கொண்டு இயங்கிவரும் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் சர்வதேச தமிழர் நிறுவனத்தின் (ITF) நிதியுதவியுடன் துணுக்காய் தேறாங்கண்டல் கலைமகள் சிறுவர் பூங்காவிற்கு போசாக்கு உணவு வழங்கல் ஆரம்ப நிகழ்வு கடந்த18ஆம் திகதி இடம்பெற்றது இதில் பயனடையும் சிறார்களைப் படத்தில் காண்க (படம்-சோதி)

## முதற்கட்ட நியாப் திட்டத்தின் ஊடாக வவுனியாவில் ரூ.460 மில்லியன் செலவீடு

(வவுனியா)

உலக வங்கியின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் வடக்கு-கிழக்கு நீர்ப்பாசன விவசாய அபிவிருத்தித் திட்டத்தின் முதற் கட்டத் தில் வவுனியா மாவட்டத்தில் 460 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக வவுனியா அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு நீர்ப்பாசன விவசாய அபிவிருத்தி திட்டத்தின் வவுனியா மாவட்ட முதற் கட்ட வேலைகளின் மீளாய்வும் இரண்டாம் கட்ட வேலைகளின் திட்டமிடல் கூட்டமும் வவுனியா அரச செயலகத்தில் நடைபெற்ற போது அவர் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், வவுனியா மாவட்டத்தில் விவசாய அபிவிருத்தியுடன் தொடர்பான வேலைகளே அதிகளவில் நடைபெற்றுள்ளன. இதில் குளங்கள் புனரமைப்பு, நீர்ப்பாசன வாய்க்கால்கள் புனரமைப்பு, விவசாய தேவைக்கு பயன்படுத்தப்படும் வீதிகள் புனரமைப்பு ஆகியன அடங்கும் இவற்றுடன் பொது மண்டபங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இதற்காகவே 460 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது என்றார். (10)

## கட்டாக்காலிகள் அதிகரிப்பு

பூநகரியில் கடந்தசில தினங்களாகக் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது. இந்நாய்கள் பூநகரி வாடியடி,பள்ளிக்குடா 4 ஆம் கட்டை, கறுக்காய்த்தீவு, ஞானிமடம், ஜெயபுரம்,முழங்காவில், வலைப்பாடு ஆகிய இடங்களிலும் அதிகமாகக் காணப்படுகின்றன.(34)

### மட்டு சிறைச்சாலையிலிருந்து மாற்றப்பட்ட

## கைதிகளை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதில் பாதுகாப்புப் பிரச்சினை

மட்டக்களப்புச் சிறைச்சாலையிலிருந்து வெளி மாவட்ட சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ள சிறைக் கைதிகளை விசாரணைக்காக நீதிமன்றத்திற்கு அழைத்து வருவதில் பாதுகாப்புத் தொடர்பான சிக்கல்களை சிறைச்சாலை நிர்வாகம் எதிர் நோக்கியுள்ளது.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கருணா அணியைச் சேர்ந்த சச்சுமாஸ்டர் உட்பட இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து சில கைதிகள் பதுளை, மொனறாகலை மற்றும் பொலநறுவை சிறைச்சாலைகளுக்குப் பாதுகாப்புக் காரணங்களுக்காக மாற்றப்பட்டுள்ளார்கள். இரு வாரங்களுக்கு ஒரு தடவை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட வேண்டிய இந்தக் கைதிகள் அங்கு மாற்றப்பட்ட பின்பு இதுவரை நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜர்ப் படுத்தப்படவில்லை. இந்தக் கைதிகளை குறிப்பிட்ட தவணைகளின் போது நீதிமன்றத்திற்கு அழைத்து வர பொலிஸ் மற்றும் இராணுவம் அல்லது விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பை சிறைச்சாலை நிர்வாகம் பெறவேண்டியுள்ளது. ஆனால் படைத் தரப்பினரோ பல்வேறு காரணங்களைக் கூறி பாதுகாப்பு வழங்க மறுத்து வருவதாக மட்டக்களப்பு சிறைச்சாலை தகவல்கள் மூலம் தெரியவருகின்றது. இதேவேளை கடந்த ஆகஸ்ட் 26ஆம் திகதி மட்டக்களப்பு புதுநகரில் கைக் குண்டுடன் கைது செய்யப்பட்டு அன்று முதல் பொலநறுவைச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இராணுவ உளவாளியான சுப்பிரமணியம் யோகநாதன் வியாழக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டியிருந்த போதிலும் ஆஜர்ப்படுத்தப்படவில்லை. இதனையடுத்து இவரது விளக்கமறியல் எதிர்வரும் 4ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. யூலை மாதம் 30ஆம் திகதி வந்தாறுமூலையில் கைத் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டு மொனறாகலை சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள கருணா அணியைச் சேர்ந்த குணசேகரம் சுபேந்திரன் என்பவர் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த வேண்டியிருந்த போதிலும் இவரும் ஆஜர்ப்படுத்தப்படவில்லை. இவரது விளக்கமறியல் நீதிமன்றத் தினால் எதிர்வரும் 5ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. பதுளைச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சச்சுமாஸ்ரர் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரான மகேந்திரன் புவிதரன் கடந்த செவ்வாய்க் கிழமை தவணையின் போது ஆஜர்ப்படுத்தப்படவில்லை. இவரது விளக்கமறியலை நீதிமன்றம் எதிர்வரும் 2ம் திகதி வரை நீடித்துள்ளது.

# எதிர்எதிர் திசைகளில் அரசின் - புலிகளின் நடவடிக்கைகள்!

விடுதலைப்புலிகளுக்கும், சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் எப்பொழுது ஆரம்பிக்கும் என உறுதியாக எவரும் கூற முடியாதுள்ளது. இதனைச் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பேச்சாளரான ஹரீம் பீரிஸினதும் பேச்சுக்களும் ஊர்ஜிதம் செய்வதாகவே உள்ளது.

பி.பி.ஸி.க்குப் பேட்டியளித்த ஹரீம் பீரிஸ் “பேச்சுவார்த்தை எப்பொழுது ஆரம்பிக்கும் என ஒரு காலவரையறையைப் பற்றிப் பேச நான் விரும்பவில்லை. இம்மாதிரியான காலவரம்புகளைப்பற்றிப் பேசுவது பெரிதும் உதவியாக இருக்காது. மேலும் அவை எதிர்காலத்தைப்பற்றி இருப்பதால் அவை கடைப்பிடிக்கக் கூடியவையும் அல்ல” எனத் தெரிவித்தார்.

ஹரிம்பீரிஸின் இக் கூற்றுக்கள் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கான வாய்ப்புக்கள் உடன் இல்லை என்பதை மட்டுமல்ல தற்பொழுது அரசாங்கத்தரப்பு பேச்சுவார்த்தைகள் தொடர்பாகக் கூறிக் கொள்பவை யாவும் கடைப்பிடிக்கப் படும் என்பதும் இல்லை என்றே பொருள் கொள்ளத்தக்கதாகும்.

இந்நிலையானது எதிர்காலத்தில் சிறிலங்கா அரசாங்கத்திற்கும்- விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் குறைந்து வருவதையே கோடிட்டுக்காட்டுபவையாகவே உள்ளன. இதனைக் கடந்தவார அரசியல் சூழ்நிலையும் வெளிப்படுத்துவதாய் உள்ளது எனின் மிகையாகாது.

கடந்த வார நிகழ்வுகள் விடுதலைப் புலிகளும் சிறிலங்கா அரசும் இருவேறு கோணங்களில் செயற்படுவதைத் தெளிவாக வெளிப்படுத்துபவையாகவுள்ளன. குறிப்பாக விடுதலைப்புலிகளின் அரசியல் குழுவினர் சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக ஐரோப்பிய நாடுகளுக்கு இராஜதந்திர விஜயத்தை மேற்கொண்டுள்ள அதேவேளை கொழும்பில் இந்திய-அமெரிக்கப் படைத்துறைத்தளபதிகள் அதிகாரிகளுடன் சிறிலங்கா அரசாங்கம் பாதுகாப்பு, இராணுவ ஒத்துழைப்புத் தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்தியது.

விடுதலைப்புலிகளின் அரசியல்குழு கடந்த மூன்று வாரங்களாக மேற்கு ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஸ்கண்டிநேவிய நாடுகளில் சுற்று பயணத்தை மேற்கொண்டு வருகின்றது. இராஜதந்திரி யான இச்செயற்பாட்டில் இந்நாடுகளின் பிரதி நிதிகளுடன் சந்திப்புக்களை நடத்தி வரும் விடுதலைப்புலிகள் இரண்டு முக்கிய மான விடயங்களை வலியுறுத்தி வருகின்றனர்.

1. விடுதலைப்புலிகளின் நியாயபூர்வமான கோரிக்கைகள் குறிப்பாக இடைக் காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான நியாயப்பாடுகள்.

2. பேச்சுவார்த்தைகளை விரைவில் ஆரம்பிக்க இந்நாடுகள் சிறிலங்கா அரசிடம் தமது செல்வாக்கைப் பிரயோகிக்க வேண்டும் என்பது.

இச்சுற்றுப் பயணத்தின் ஓர் அங்கமாக இனப்பிரச்சினை விவகாரத்தில் ஏற்பாட்டாளர்களாகச் செயற்படும் நோர்வே அரசின் பிரதிநிதிகளாகச் செயற்படும் வெளிவிவகார அமைச்சர் பீற்றர்சன் பிரதியமைச்சர் விதார்ஹெல்கேசன், சிறப்புத்தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் ஆகியோருடனும் சந்தித்துத் தற்போதைய அரசியற் சூழ்நிலை குறித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார்ஹெல்கேசன் இந்தியத் தலைவர்களையும், விசேட தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் அமெரிக்க அதிகாரிகளைச் சந்தித்த பின்னரும் நடைபெற்றதான இப்பேச்சுவார்த்தைகளிலும் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பது தொடர்பான முன்னேற்றகரமான விடயங்கள் எவையும் கலந்துரையாடப்பட்டதாகத் தெரியவரவில்லை.

இந்நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் தொடங்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் எவையும் இருப்பதாக இல்லை. இதேவேளை சிறிலங்கா சனாதிபதியின் அழைப்பை ஏற்று நவம்பர் மாத நடுப்பகுதியில் நோர்வே அரசின் வெளிவிவகார அமைச்சர் கொழும்பிற்கு விஜயம் செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற போதும்- இவ்விஜயமானது முன்னேற்றகரமான முடிவுகளுக்கு வழிவகுக்குமா என்பது சந்தேகமே.

ஏனெனில் சனாதிபதி சந்திரிகாவின் அழைப்புடன் தொடர்புபட்டதாக வெளியான தகவல்கள் உண்மைக்கு மாறானவையாகும். அதாவது, விடுதலைப்புலிகள் சிறிலங்கா அரசின் மாற்று யோசனைகளை ஆராயத் தயாராகவுள்ளனர் என்பதன் அடிப்படையிலேயே சனாதிபதி தரப்பால் இவ் அழைப்பு விடுக்கப்பட்டதாக இருப்பின் இதில் பயன் எதுவும் கிட்டுமா என்பது சந்தேகமே. ஏனெனில், புலிகள் இயக்கம் அரசு கூறியது போன்று அறிவிப்பு எதையும் செய்யவில்லை. இதனால், வழமைபோலவே நோர்வே வெளிவிவகார அமைச்சரின் இப்பயணமும் இருப்பதற்கான வாய்ப்பே உண்டு.

இவ்வாறாகச் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக எந்தவித ஆக்கபூர்வமான முன்னேற்றமும் காணப்படாத நிலையில் சிறிலங்கா அரச தரப்பு பாதுகாப்பு என்ற ரீதியில் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் இனப்பிரச்சினைக்குச் சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு என்ற கருத்தினைப் பலவீனப்படுத்தி வருவதாகவுள்ளது.

சிறிலங்கா அரச தரப்பு நாட்டின் பாதுகாப்பு என்ற ரீதியில் ஆயுதப்படைத் தரப்பைப் பலப்படுத்துவதில் தீவிர அக்கறை வெளிப்படுத்தி வருகின்றது. நவீன ஆயுததளபாடக் கொள்வனவு வெளிநாட்டவரின் பயிற்சி, ஆலோசனைகள் என அவை நீண்டவையாகவுள்ளன. இந்தவகையில் கடந்த வாரத்தில் சிறிலங்காவின் தலைநகர் கொழும்பில் முக்கியமான இரு விடயங்கள் நடந்தேறின.

1. இந்திய பாதுகாப்புத்துறை அதிகாரிகள், சிறிலங்கா அதிகாரிகள் இடையில் இந்திய-சிறிலங்கா பாதுகாப்பு உடன்பாடு தொடர்பாகவும் பலசுற்றுப்பேச்சுவார்த்தைகள் நடந்தன.

தற்பொழுது இது குறித்து வெளியாகும் தகவல்கள் இப்பேச்சுவார்த்தைகள் முற்றுப்பெறும் நிலையை எட்டிவிட்டன எனவும், அரசாங்கம் முடிவெடுக்கும் நாளில் இவ் உடன்பாடு கைச்சாத்தாகும் எனவும் தெரிவிக்கின்றன. குறிப்பாக இவ் வாண்டின் இறுதிக்குள் இவ்உடன்பாடு கைச்சாத்தாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ் உடன்பாடு கைச்சாத்தாகும் பட்சத்தில் சிறிலங்கா ஆயுதப்படைக்கு இந்தியாவிடம் இருந்து பலவகையான இராணுவஉதவிகள் கிடைக்கப்பெறுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு என எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக ஆயுதத்தளபாடங்கள் பயிற்சிகள் என்பனவும், தகவல் பரிமாற்றம் என்பனவும் இடம்பெற வாய்ப்பு ஏற்படும்.

இதனால், இந்திய-சிறிலங்கா கடற்படைக்கு இடையிலான தொடர்புகள் நெருக்கமானவையாக அமைய வாய்ப்புண்டு. இதன்பிரகாரம் வங்காள விரிகுடாவில் இருகடற்படையும் கூட்டாகச் செயற்படும் அளவிற்கு நிலைமை முன்னேற்றம் காணும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2. அமெரிக்கப் பசுபிக் பிராந்திய இராணுவக்கட்டளைப் பீடத்தின் திட்டமிடல் இயக்குனரான மேஜர் ஜெனரல் டபிள்யூ.எயிட்கான் பெரியின் கொழும்பிற்கான இரகசிய விஜயமாகும்.

ஒருபுறத்தில் இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு குறித்துப் பேச்சுக்களை நடத்திக் கொண்டிருக்கையில், அமெரிக்கப்படை அதிகாரி சிறிலங்காவின் பாதுகாப்பு நிலை குறித்து ஆராய்ந்து கொண்டிருந்தார்.

மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த இவ்விஜயத்தின் போது அமெரிக்கப்படை அதிகாரி அரச உயர்மட்டத் தலைவர்கள் கடற்படை, விமானப்படை மற்றும் இராணுவத்தளபதிகளையும் சந்தித்துப் பேசியதாகவும், சிறிலங்காவின் பாதுகாப்பு நிலவரம் குறித்து ஆராய்ந்துள்ளனர்.

இந்நிலையில் தற்பொழுது எழும் கேள்வியானது யுத்த நிறுத்த சூழ்நிலையில் சிறிலங்கா அரசு இராணுவ ரீதியில் தன்னைப் பலப்படுத்திக்கொள்வதற்குக் கொடுக்கும் முக்கியத்துவம் அளவு இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற் கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதா? என்பதே ஆகும்.

அடுத்ததாக எழும் கேள்வியானது இலங்கையின் தற்போதைய அரசியல் சூழ்நிலையைப் பயன்படுத்தி இந்தியாவும், அமெரிக்காவும் சிறிலங்காவில் தமது செல்வாக்கை-அரசியல்,இராணுவரீதியில் முனைப்புப்படுத்த முற்பட்டுள்ளனவா? அதாவது பனிப்போர் என்ற வகையிலான செயற்பாட்டில் இறங்கியுள்ளனவா? என்பதாகும்.

சிறிலங்கா அரசு இராணுவ ரீதியில் தன்னைப் பலப்படுத்திக் கொள்வதற்கான போக்கில் தீவிரமாகவுள்ளது என்பது வெளிப்படையானது. சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் சிறிலங்கா அரசோ, அதன் ஆயுதப்படைத தரப்போ அவ்விடயத்தில் எவ்வேளையிலும் தளர்வைக் காட்டவில்லை.


சிறிலங்கா அரசைப் பொறுத்தவரையில் யுத்தநிறுத்த உடன்பாடு என்பதே தன்னை இராணுவ ரீதியில் பலப்படுத்திக் கொள்வதற்கானதொரு சந்தர்ப்பமாகக் கொள்ளப்படுவதாகவுள்ளது. ஆகையினால், இந்தியாவுடனும், அமெரிக்காவுடனும், அது நெருக்கமான உறவை வளர்த்துக்கொள்ள விருப்பம் கொண்டதாயுள்ளது.

குறிப்பாக இந்தியாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்வதில் சிறிலங்கா ஆட்சியாளர்கள் தீவிர அக்கறையாக இருந்தனர். இதில் ஐ.தே.கட்சியோ, அன்றி இன்றைய ஆளும் கூட்டணியோ இரண்டுமே வேறுபட்ட கருத்தைக்கொண்டதாக இருக்கவில்லை.

இதேவேளை அமெரிக்காவுடனும் இராணுவ ஒத்துழைப்புத் தொடர்பான நெருக்கமான ஒத்துழைப்புக்களைப் பேணுவதில் சிறிலங்கா அரசாங்கம் அக்கறை கொண்டிருந்தது. இதன்பிரகாரம் அமெரிக்காவின் கிழக்குப் பசுபிக் பிராந்தியப் படைத்தளத்துடனான சிறிலங்காவின் பிணைப்பு அதிகரித்தது.



குறிப்பாக இலங்கை தொடர்பான நடவடிக்கைகள் கிழக்குப் பசுபிக் பிராந்திய கட்டளைத்தளத்தின் ஊடாகவே மேற்கொள்ளப்படுவதாக உள்ளது. இதன் காரணமாக அமெரிக்க கிழக்கு பசுபிக் பிராந்தியமட்ட அதிகாரிகள் சிறிலங்காவிற்கு அடிக்கடி விஜயங்களை மேற்கொள்ளும் நிலையும், சிறிலங்காப்படை அதிகாரிகள் அமெரிக்க கிழக்கு பசுபிக் தலைமையகத்திற்கும் விஜயங்களை மேற்க்கொள்ளும் வாய்ப்பும் உருவாகியது.



அமெரிக்காவுடனான இவ்வுறவானது சர்வதேச பாதுகாப்பு வலைப் பின்னலுடன் தன்னைத் தொடர்புபடுத்துவதாக இருந்தது. அமெரிக்காவைப் பொறுத்து இந்து சமுத்திரம் மற்றும் தெற்கு, தென்மேற்கு ஆசியப் பிராந்தியங்கள் மீதான கண்காணிப்புத் தொடர்புகளை மையப்படுத்துவதற்கானதொரு மையமாக சிறிலங்காவுடனான உறவு நோக்கப்பட்டன.

இந்நிலையில், தற்பொழுது இவ்விரு நாடுகளும் (இந்தியா-அமெரிக்கா) சிறிலங்காவிற்கு இராணுவ ரீதியில் தாராளமான உதவிகளை வழங்க முன் வந்துள்ளன. தற்போதைய சூழ்நிலையைப் பார்க்கையில் சிறிலங்காவிற்கு இராணுவ ரீதியிலான உதவி வழங்குவதில் இவற்றிற்கிடையில் ஒரு போட்டி ஏற்பட்டுள்ளதோ எனச் சந்தேகிக்க வைக்கின்றது.

தனது தேவை கருதி சிறிலங்கா அரசு வழங்கிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இவ்விரு அரசுகளும் போட்டியினை அதிகரிக்கச் செய்துள்ளதாக ஊகிக்க முடிகின்றது. அதாவது வழங்கப்பட்ட வாய்ப்பினைப் பயன்படுத்தி அவை இலங்கை மீதும் இப்பிராந்தியத்திலும் தமது ஆதிக்கத்தை வலுப்படுத்த முற்பட்டுள்ளதாகக் கருதவேண்டியுள்ளது.

ஆனால் ஆயுதப்படைத்தரப்பைப் பலப்படுத்த முனையும் சிறிலங்கா அரசும் சரி, சிறிலங்கா அரசிற்கு இராணுவரீதியில் உதவும் நாடுகளும் சரி, இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வுகாண ஒத்துழைப்பதாகவோ, உதவி செய்வதாகவோ கூறுவதில் அர்த்தம் எதுவுமில்லை. ஏனெனில் சிறிலங்கா அரசு யுத்த நிறுத்தம்-சமாதானப் பேச்சுவார்த்தை என்பனவற்றை பலவீனத்தின்/நெருக்கடியின் காரணமாக மேற்கொண்டதேயொழிய, தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்விற்காக மேற்கொண்டதில்லை. ஆகையினால் இராணுவ ரீதியில் சிறிலங்கா பலப்படும் நிலையில் சமாதானப் பேச்சுக்கள் கண்காணாது தொலைந்து போகலாம். □

ஜெயராஜ்

# ஐக்கிய நாடுகள் தினம் 24 ஐப்பசி 2004 இல்

unicef

### ஐக்கியநாடுகள் தினம்

இலங்கையில் யுனிசெவ் நிறுவனமானது கொழும்பை தலைமை அலுவலகமாகக் கொண்டு 1976 ஆம் ஆண்டு முதல் பணிபுரிந்து வருகின்றது. யுனிசெவ் நிறுவனத்தின் வலயப்பணிமனைகள் (அலுவலகங்கள்) யாழ்ப்பாணத்தில் 1997 ஆம் ஆண்டிலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பணிமனை 1998 ஆம் ஆண்டில் மல்லாவியிலும், வவுனியா, திருகோணமலை, மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் 1999 ஆம் ஆண்டி



லும் திறந்து வைக்கப்பட்டன.

உலகளாவிய ரீதியில் சிறுவர்களின் உரிமைகளை மேம்படுத்துவதற்காகவும், பாதுகாப்பதற்குமாக சுமார் 7000 இற்கு மேற்பட்ட பெண்களும், ஆண்களுமாக யுனிசெவ் நிறுவனத்தில் பணி புரிந்து வருகின்றனர். யுனிசெவ் நிறுவனமானது சிறுவர்களின் உரிமைக்காகவும், அவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையில் அத்தியாவசிய மருத்துவப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்தல், தடுப்பூசி மருந்து ஏற்றுதல், கல்வி, சுகாதாரம், மற்றும் அவசர காலப்பொருட்கள் சேவை விநியோகம் என்பவற்றை வழங்குவதினூடாகவும் பங்களிப்புச் செய்து வருகின்றது. அபிவிருத்தித்திட்டங்களின் வெளிப்பாடுகள் தொடர்ந்து பயனளிக்கும் வகையில் யுனிசெவ் நிறுவனமானது ஒவ்வொரு சமயமும் பங்காளிகளுடன் பணிபுரிந்து வருகின்றது. பங்காளித்துவம், கூட்டுறவு என்பற்றினூடாக நாம் எமது உலக அறிவையும், அனுபவங்களையும் அவர்களுடன் பகிர்ந்து, அவர்களுடைய தீர்வுகாண் திறமைகளை வளர்க்க உதவுகிறோம்.

### கல்வி

பிள்ளைகளின் அபிவிருத்திக்கும், ஆரோக்கியத்திற்கும் கல்வி அத்தியாவசியமானது. சமூகத்தின் சமநிலைக்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் இது முக்கியமானது. அத்துடன் விளையாட்டு, பொழுது போக்கு என்பனவும், பிள்ளைகளின் அபிவிருத்தியில் சமமான முக்கியத்துவத்தைக் கொண்டது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களைக் கல்விக்கழகத்தின் ஒத்துழைப்புடன் வலையக் கல்வித்திணைக்களங்கள், கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம், வசந்தம், கரியாலை மக்கள் அபிவிருத்தி நிறுவனம் ஆகியவற்றினூடாக செயற்படுத்தி வருகின்றது.

மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றுவரும் "இழந்த கல்வியை ஈடுசெய்தல்" திட்டத்தின் கீழ் 21,548 சிறுவர்களுக்கு உதவியளித்து வருகின்றது. இத்திட்டத்தின் ஆரம்பத்திற்கு உலக உணவு ஸ்தாபனம் இத்திட்டத்தில் பயனடையும் எல்லா சிறுவர்களுக்கும் மதியஉணவு வழங்கி உறுதுணை புரிகின்றது. பிள்ளைகளுக்கான ஆரோக்கியமானதும், நட்புறவுடன் கூடியதுமான பாடசாலைச் சூழலை உருவாக்கி அதனூடாகக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை மேம்படுத்தும் வகையில் "பிள்ளை நேயப்பாடசாலைகளை" அபிவிருத்தி செய்து வருகிறது. பாடசாலைகளில் 134 வகுப்பறைத்திருத்தம். நிர்மாணம், மீள்வேய்தல் என்பவற்றினூடாக 8,980 மாணவர்களுக்கு அடிப்படை வகுப்பறை வசதிகளை வழங்கியுள்ளது. இதற்கு மேலதிகமாக கல்வித்திணைக்களங்களை மேம்படுத்தல், ஆசிரியர்களுக்கான பயிற்சி விளையாட்டு உபகரணங்கள் வழங்கல் ஆகியவற்றிற்கும் ஆதரவளிக்கின்றது.

### குழந்தைப் பராய அபிவிருத்தி

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைப் பொறுத்தவரையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அவசர சிகிச்சைப்பிரிவு, பற்சிகிச்சை பிரிவு ஆகியவற்றை நிர்மாணித்து வழங்கியதுடன், அதற்குரிய உபகரணங்களையும் வழங்கியது. புதுக்குடியிருப்பு கிராமிய வைத்தியசாலையிலும். கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையிலும் மகப்பேற்று விடுதிகளை புனர்நிர்மாணிப்பதற்கு உதவி வழங்கியதுடன் இரத்த வங்கிக்குரிய உபகரணங்களையும், புதுக்குடியிருப்பு கிராமிய வைத்தியசாலைக்கு வழங்கியுள்ளது.

அயடீன் குறைபாட்டு நோயானது சிசு மூளை வளர்ச்சி வீதத்தை குறைப்பதுடன், குழந்தைப் பேற்றிலும் பாதிப்பை ஏற்படுத்தும். இப்பிரச்சினையை முறியடிக்கும் முகமாக யுனிசெவ் நிறுவனம் அயடீன் உப்புப்பேட்டையை ஆனையிறவில் நிர்மாணிப்பதற்கு மதியுரையகம் ஊடாக உதவி வழங்கியுள்ளது.

### சிறுவர்பாதுகாப்பு:-

பிள்ளைகளைத் தீங்கிலிருந்து பாதுகாப்பது ஒவ்வொரு வளர்ந்தோரினதும் பொறுப்பாகும். யார் சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்கிறார்களோ அவர்கள் சட்டத்தின் கீழ் கட்டாயமாகத் தண்டிக்கப்படவேண்டிய வர்கள். அத்துடன் இளைய சமூகத்தைப் பாதிக்கும் கருத்துக்கள் முரண்பாடுகள், பற்றிய உணர்வுகளைச் சமூகங்கள் தமக்கிடையே வெளிப்படையாகக் கலந்துரையாட வேண்டிய தேவையுள்ளது. சிறுவர்களைத் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்வதற்கான திறன் கட்டாயமாக வழங்கப்படவேண்டும்.




யுனிசெவ் நிறுவனம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இலங்கை அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகள், ஐக்கிய நாடுகளின் ஏனைய அமைப்புக்கள், சர்வதேச நிறுவனங்கள், மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் பணி புரிந்து வருவதுடன் பிள்ளைகளுக்கெதிரான துஷ்பிரயோகத்தை வெளிக்கொணர்வதற்கான சந்தர்ப்பத்தையும் ஏற் படுத்துகிறது. கிளி நொச்சியில் உதவி தேவைப்படும் பெண்கள் சிறுவர்களுக்கான வெகு விரையில் அவர்களின் உடனடிப் பாதுகாப்புத் தேவைகளைத் தீர்க்கக் கூடிய வகையில் ஒரு "பெண்கள் சிறுவர்களுக்காக நிலையத்தை" ஆரம்பிக்கவுள்ளது.

யுனிசெவ் நிறுவனத்தின் ஆதரவுடன் தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தினால் சிறுவர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வு பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. சமுதாயத்திற்கு சிறுவர் உரிமைகள் சம்பந்தமான பயிற்சிகளை விரிவுபடுத்துவதற்காகப் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்திற்கு யுனிசெவ் நிறுவனம் தனது ஆதரவினை வழங்கி வருகின்றது. மேலும் யுனிசெவ் நிறுவனம் நேரடியாக த.வி.பு நீதித்துறையினர் மற்றும் காவல்துறையினர் ஆகியோருக்கு சிறுவர் உரிமைகள் தொடர்பான பயிற்சியை வழங்கியுள்ளது.

கண்ணிவெடி தொடர்பான விழிப்புணர்வுத்திட்டம் வெண்புறா நிறுவனத்தினூடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. பொதுமக்கள் தங்களுடைய சொந்தமான இடங்களுக்குத் திரும்புவதற்கு ஏற்ற வகையில் இவ்விழிப்புணர்வுத்திட்டம் வளர்ச்சியடைந்துள்ளது. வன்னி மாவட்டத்தில் 10 விழிப்புணர்வு நிலையங்களை அமைப்பதற்கு யுனிசெவ் நிறுவனம் ஆதரவளித்துள்ளது. அந்நிலையங்கள் மூலம் பொது மக்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்படுவதுடன் பொதுமக்கள் அந்நிலையங்களில் கண்ணிவெடி காணப்படும் பகுதிகள்,மற்றும் கண்ணிவெடி விபத்துக்கள் சம்பந்தமான அறிக்கைகளை சமர்ப்பிக்கக் கூடியதாகவுமுள்ளது.

கண்ணிவெடியால், அல்லது வெடிபொருட்களால் கால்களை இழந்த சிறுவர்கள், மற்றும் பொதுமக்களுக்கு செயற்கைக்கால், முச்சக்கரவண்டி, மற்றும் சக்கர நாற்காலிகள் என்பவற்றை வழங்கி வருகின்றது. மின்பிறப்பாக்கி, நீர் இறைக்கும் இயந்திரம், நுளம்பு வலைகள், மின்சார இணைப்பு மற்றும் சிறுவர்களுக்கான வதிவிடம், வகுப்பறைகள் நிர்மாணித்தல் மூலம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள சிறுவர் இல்லங்களுக்குக் கடந்த ஆண்டுகளாக ஆதரவளித்து வருகின்றது.

இலங்கை வாழ் சிறுவர்களுக்கு எது முக்கியமாகவுள்ளதோ அதற்கான நிலைமைகளில் எந்த மாற்றம் ஏற்பட்டாலும் அவர்களுக்காக யுனிசெவ் நிறுவனம் சமூகத்தினுடனும் பங்காளிகளுடனும் எந்நேரமும் பணிபுரியும்.

UNDP

### மாறுநிலைத்திட்டம்:-

ஐக்கியநாட்டு மாறுநிலைத் திட்டமானது முழு இலங்கையிலும் ஒரு முக்கியமான மீள் நல் வாழ்க்கைக்கும் நிலைபேறான அபிவிருத்திக்கும், பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கும் வறுமையை ஒழிப்பதற்குமாக தயாரிக்கப்பட்டது.

இத்திட்டமானது மக்கள் நல்வாழ்க்கையுடன் வாழக்கூடிய விதத்தில் உள்ளூர் பொருளாதார வளர்ச்சியை மையமாகக் கொண்டு நேரடியாகப் பெண்களை வலுப்படுத்தி யுத்தம் காரணமாகவும், சூழல் காரணிகளால் பாதிக்கப்பட்ட இடம் பெயர்ந்தவர்கள், வலுக்குறைந்தவர்கள் ஆகிய எல்லா வகையினர்களையும் ஒன்றிணைக்கும் உபாயத்தோடு பிரச்சினைக்குள்ளான வடக்கு-கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களிலும் தெற்கில் சூழல் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் 2001 ஆம் ஆண்டிலிருந்து மாறுநிலைத் திட்டமானது சுமார் 25,000 மக்களுக்கு மீள் வாழ்க்கைக் கும் வலுவூட்டலுக்கும் உதவியளிக்கப்பட்டுள்ளது.

### சமூக அபிவிருத்தி:-

மாறுநிலைத்திட்டம் ஐந்து பகுதிகளாகத் தலையீடு செய்கிறது. சமூகத்தின் வித்தியாசமான தேவைகளையும், அவர்களின் வலுவையும், எண்ணங்களையும், அடிப்படையாக வைத்து ஒன்றிணைந்த சமமான உதவி, பொதிமூலம் வழங்கப்படுகிறது. நடுத்தர நீண்டகால நிலைபேறான அபிவிருத்தியை நோக்கிய திட்டநடைமுறைப்படுத்தலில் சில வேளைகளில் நிவாரணத்தையும் உள்ளடக்குகிறது.



### நுண்கடன்:-

கிராமப்பகுதியில் பாதிக் கப்பட்டவர்கள் இலகுவில் கடன் பெறக்கூடிய சூழலை உருவாக்கி புதியகடன் சங்கங்களையும், கூட்டுறவுச் சங்கங்களையும், வியாபார, சந்தைப் படுத்தல் பயிற்சிகளையும், நிறுவனங்களைப் பலப்படுத்தி அவற்றைக்கண் காணிப்பதும் இதில் அடங்கும்.

### வலுவூட்டல்:-

நிலைபேறான நிலைமையைப்பலமான உள்ளூர்ப் பங்குதாரர்கள் மூலம் சமூக மட்டத்திலும், உள்ளூர் அரசாங்

# கிளிநொச்சியில் கொண்டாடும் ஐக்கிய நாட்டு நிறுவனங்கள்

கத்துடனும் உறுதிப்படுத்துதல் மாறுநிலைத்திட்டத்தின் அம்சமாகும். பலதரப்பட்ட நுட்பங்களை பயிற்சி மூலம் கிடைக்கச் செய்தல் இவை திட்டமிடல், முகாமைத்துவம், பயிற்சிகளைக் கண்காணித்தல், சமூக கவலுவூட்டல், சமூக மட்டத்து நிறுவனத் திறற்குரிய பலப்படுத்தல் அபிவிருத்தி நுட்பங்களைப் பகிர்தல் கட்டட நிர்மாணங்களைத் தொடர்ந்து பேணிக்காத்தல் போன்றவை உள்ளூர் நிறுவனங்களின் பங்களிப்பு சமூக மட்டத்திற்கு நல்ல தாக்கத்தைக் கொடுக்கக்கூடிதாக இருத்தல் வேண்டும்.

**கட்டுமான அபிவிருத்தி:-**

மாறுநிலைத்திட்டம் சமூக கட்டுமான அபிவிருத்திக்கு உதவியளிக்கிறது. வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கானகட்டுமானப் பணி உதாரணமாக நீர்ப்பாசனம், குளம் விவசாய சந்தைப்படுத்தல், பாதுகாப்பு அரண்கள், பாலங்கள், வீதிகள் திருத்துதல் மற்றும் போரினால் பாதிக் கப்பட்ட அழிவுப் பொருட்களை அகற்றல் இவற்றில் அடங்கும்.

**தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தல்:-**

மாறுநிலைத் திட்டத்தினால் அழிந்த கட்டுமானங்களைப் புனரமைக்கும் பொழுது மக்களுக்குப் பணம் கிடைக்கும் வகையில் ''வேலைக்குப் பணம்'' என்ற அடிப்படையில் வசதியளிக்கப்படுகிறது.

**மீன்பிடி, விவசாயம், கால்நடை:-**

கிராமிய வறிய இலங்கை மக்களின் பரம்பரை உற்பத்தித் தொழிலான விவசாயக்கால் நடை மீன்பிடித்தொழில்களுக்கு திட்டத்தில் முக்கிய இடம் கொடுக்கப்படுகிறது. சங்கங்களுக்கும், துறைசார்ந்த அரச நிறுவனங்களுக்கும் விசாலிப்புச் சேவையைத் திறம்படச் செய்யவும், உபகரண வசதிகளைக் கடன்அடிப்படையில் வழங்கவும், (மீன்பிடி சமாசம், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு) உதவவும் வழி செய்கிறது.

**திட்டம் நடைமுறைப் படுத்தப் படும் முறை:-**

முழுச் சமூகத்தின் மீளக் குடியமர்ந்தோர் மற்றும் உள்ளூர்வாசிகள் ஆகியோரின் தேவைகளைப் பகுப்பாய்வு செய்து முன்னுரிமைப்படுத்தி நடவடிக்கைகளை உபதிட்டம் தாயாரித்து பங்குதாரர்கள் மூலமாக நடைமுறைப்படுத்தப் படும்.

மாறுநிலைத்திட்டம் கூடிய ளவு அரச மட்டத்தில் பங்குதாரர்களைக் கொண்டதாகவும், சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், உள்ளூர் அதிகார நிறுவனங்கள், அரசஅதிபர், பிரதேசசெயலர், கிராம சேவை உத்தியோகத்தர் போன்றவர்களுடன் திட்டத்தலையீடுகள் நடவடிக்கை சம்பந்தமாக கலந்தாலோசிக்கப்படும் உபதிட்டம் முன்மொழியப்பட்டு அரச அதிபரைத் தலைவராகவும் ஐ.நா. அ திட்டப் பிரதிநிதி. அரச சார்பற்ற ஒன்றியப் பிரதிநிதி, சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதி மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களைக் கொண்ட மாவட்ட மீளாய்வு சபையூடாகச் சிபார்சு செய்யப்படல் வேண்டும்.

திட்டத்தை நடைமுறைப் படுத்தப்படும் பகுதியில் உள்ளூர் சமூக அமைப்புக்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் நடைமுறைப்படுத்தல் கண்காணிப்பு ஆகியவற்றை ஐ.நா அபிவிருத்தி நிறுவனத்தின் வழி காட்டலின்படி அமைய வேண்டும்.

கண்காணித்தல், மதிப்பீடு செய்தல் மூன்று கட்டங்களாக இருக்கும். நடைமுறைப் படுத்தும் பங்காளி நிறுவனம் கண்காணிப்பு அறிக்கையைச் சமர்ப்பிக்கும். சம்பந்தப்பட்ட உள்ளூர்த்திணைக்கள அதிகாரிகள் தொழில் நுட்ப வேலைத்திறன் தரத்தை உறுதி செய்வார்கள். ஐ.நா.அ கழகக்கந்தோர் நேரடியாகக் கண்காணிப்புச் செய்யும் பல மாவட்டங்களில் கூட்டுறவு ஆணையாளர் கண்காணிப்பு வேலைகளில் முக்கிய பங்கு வகிக்கிறார்.

மாறுநிலைத் திட்டம் மேலும் நல்வாழ்வு அபிவிருத்தித்திட்டச் செயற்பாட்டா ளர்கள் முக்கிய நிறுவனங்களுடன் 4R நிகழ்ச்சித் திட்டத்தில் UNICEF ILO ஆகியவற்றுடன் இணைந்து இடம் பெயர்ந்தோர் நிலையான வாழ்க்கையைத் தொடர UNHCR உடன்பங்குதாரர் களாக இணைந்து செயற்படுகிறது.

## வன்னியில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் (அ.ஐ.நா.உ.ஸ்) பிரசன்னம்

**பின்னணி**

கடந்த காலங்களில் உள்நாட்டில் இடம் பெற்ற கலவரங்கள் காரணமாக குறிப்பிடத்தக்களவு மக்கள் உள் நாட்டில் இடம் பெயர்ந்தவர்களாகவும் அகதிகளாகவும் ஆக்கப்பட்டார்கள். குறிப்பாக 1983 இல் இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரமும், மற்றும் வடக்குக், கிழக்குப் பகுதிகளில் இடம் பெற்ற ஏனைய இராணுவ நடவடிக்கைகளினாலும் பல இலங்கையர்கள் அகதிகளாகவும் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களாகவும் ஆக்கப்பட்டார்கள்.


வன்னியில் இருந்த அ.ஐ.நா.உ.ஸ் தானிகர் அலுவலகங்கள் ஏற்கனவே உள்ளூர் இடம்பெயர்ந்து வாழ்பவர்களுக்கும் மற்றும் இராணுவ முன்னணி நிலைகளில் ஏற்பட்ட ஏனைய இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்து செல்பவர்களுக்கும் உதவி செய்துவந்தன. 1996ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து பெரும் தொகையான மக்கள் இடம் பெயர்ந்து வன்னிக்கு வந்தபோது மடு மற்றும் மல்லாவியில் இயங்கி வந்த அலுவலகங்கள் இவ்வாறு உள்ளூர் இடம் பெயர்ந்தவர்களின் இடப்பெயர்வினால் ஏற்பட்ட தாக்கத்தை குறைப்பதற்காக நிவாரண அடிப்படையிலான அவசர மற்றும் அடிப்படையிலான குடிநீர் அவசர இல்லிடத் தேவை வருமான வளத்துக்கான உதவி உள்ளூர் இடம் பெயர்ந்தவர்களின் உறவினர்களுக்கிடையேயான அவசர தகவல் பரிமாற்றம் சமூக சேவைகள், கல்விக்கான உதவிகள் மற்றும் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கான உதவிகளை அரசாங்கம் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் அதிகாரிகள ஆகியோரின் ஒத்துழைப்புடனும் செய்து வந்தன.

**தற்போதைய நிலை:-**

இலங்கையில் இன்னமும் 357855 உள்ளூர் இடம் பெயர்ந்தவர்களாக இருக்கிறார்கள் அதேநேரம் 133003 பேர் வெளிநாடுகளில் அகதிகளாக உள்ளனர்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் இன்னமும் 86971 பேர் உள்ளூர் இடம் பெயர்ந்தவர்களாக உள்ளனர். இவ் எண்ணிக்கையில் 10434 பேர் 48 நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இம் மக்களின் நிலைமை இன்னமும் மிகவும் கஸ்ரமான நிலையில் இருக்கின்றது. இம்மக்கள் இன்னமும் குடிநீர் இல்லிடம், சுகாதார தேவைகள், பாடசாலைகள், கண்ணிவெடி மற்றும் வெடிக்காத் பொருட்ளை அகற்றுதல் மற்றும் உட்கட்டுமானம் போன்ற தேவைப்பாடு உள்ளவர்களாக இருக்கின்றார்கள் கடந்த இரண்டு வருடங்களாக வன்னியில் மிதிவெடி கண்ணிவெடி மற்றும் வெடிக்காத பொருட்கள். அகற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்னமும் பெருமளவு பரப்பில் இவ்வகையான பொருட்கள் அகற்றப் படவேண்டியுள்ளன. வன்னியிலுள்ள நிலைமைகள் மக்கள் பாதுகாப்பாக மீளத்திரும்புவதற்கு ஏற்றதாக இருப்பதாக அ.ஐ.நா.உ.ஸ். உணரவில்லை. குறிப்பிடத்தக்களவு உள்ளூர் இடம் பெயர்ந்த மக்கள் காணியற்றவர்களாகவும் இருக்கின்றார்கள். வன்னியில் UNHCR மேற்கொள்ளும் நடவடிக்கையானது முக்கியமாக பாதுகாப்புத் தொடர்பானது. யு.என். ஏச். சி.ஆரின் இலக்கு உள்ளூர் இடம பெயர்ந்தவர்களும், வெளிநாடுகளில் இருந்தும் திரும்புவர்களுக்கும் பாதுகாப்பைப் பெறுவதற்கான வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்ததாகும்.

ஏதாவது ஒழுங்கமைக்கப் பட்ட மீளத்திரும்புதலானது நடைபெறமுன் அம்மக்கள் மீளக குடியமர இருக்கும் இடங்களில் அம்மக்களுக்கு உடல் ரீதியான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நிலைமைகளை யு. என்.எச்.சி. ஆர் கண்காணித்துக் கொண்டிருக்கினறது.



இவ் அலுவலகமானது உள்ளூர் இடம் பெயர்ந்தவர்களதும் மீளத் திரும்புபவர்களதும் உரிமைகளைப் பாதுகாப்பது முதன்மையானதும் இதற்கு எல்லாத் தரப்பினருடனும் வேலை செய்கிறது.

வன்னியிலுள்ள எல்லாத் தரப்பினரையும் யு.என்.ஏச்.சி. ஆரினால் ஒழுங்குபடுத்தப் படுகின்ற மனித உரிமைகள் மற்றும் மனதாபிமான சட்டங்கள் சம்பந்தமான பயிற்சிப் பட்டறைகளில் கலந்து கொள்ளும் படி அழைக்கின்றது. இவ்வாறான பயிற்சிப்பட்டறைகள் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான உரிமைகள் பால் ரீதியான வன்முறைகளைத் தடுத்தல் போன்ற விடயங்களில் ஒரு வழிகாட்டும் முறைகளைப் பல தரப்பட்ட தரப்பினருக்கும் வழங்குவதே ஆகும்.

சமூக மட்டத்தில் பயிற்சிப்பட்டறைகள் மற்றும் வீதி நாடகங்கள் மூலமாக பால் ரீதியான வன்முறைகளைத் தடுத்தல், குடிபோதைத் தடுப்பு, கற்பழிப்பு மற்றும் ஏனைய துஷ்பிரயோகங்கள் சம்பந்தமான விடயங்கள் மக்களுக்கு விழிப்புணர்வு செய்யப்படுகின்றன. யு.என்.ஏச்.சி.ஆர் ஆனது நாடற்றவர்களின் எண்ணிக்கைகளைக் குறைப்பதற்கும் பரிந்துரைக்கின்றது.

உளரீதியாகப் பாதிக்கப் பட்ட மற்றும் ஏனைய பாதிப்புக்குள்ளான உள்ளூர் இடம் பெயர்ந்த மீளக்குடியமர வந்தவர்கள் தங்கள் தொடர்ச்சியான வாழ்விடங்களில் கௌரவமாகவும், ஆக்கபூர்வமாகவும் வாழ்வதற்கு உதவிகள் செய்து வருகின்றது. சமூக மட்டத்தில் பழுதடைந்த கிணறுகளைத் திருத்தவும் மற்றும் மிகவும் பாதிப்படையக் கூடியவர்களுக்கும் இல்லிடத்தினை அமைப்பதற்கான பொருட்களும் மீள வேய்தலுக்கான பொருட்களும் வருமான வளத்திற்கான பொருட்களும் அத்துடன் தனிப்பட்ட மலசலகூட வசதிகளைப் பெறுவதற்கும் உதவி செய்கிறது.

இவ் அலுவலகமானது தொடர்ச்சியாக உணவல்லாத நிவாரணப் பொருட்களை உள்ளூர் இடம் பெயர்ந்தவர் களுக்கும் மீளத் திரும்பியவர் களுக்கும் வழங்கி வருகிறது.

* 2004ஆம் ஆண்டிற்கு சுமார் 8000 பொதிகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**மாறு நிலைத்திட்டம்**

கிளிநொச்சி மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட ஐந்து கிராமங்களில் இவ் மாறுநிலைத் திட்டத்தின்கீழ் யு.என். ஏச்.சி.ஆர் ஆனது மீளத்திரும்பிய மக்களுக்கு அடிப்படை இல்லிட வசதிகளையும், குடிநீர் வசதிகளையும் வருமான வளத்திற்கான உதவிகளையும் செய்து வருகிறது. இத் திட்டமானது ஏனைய ஐ.நா. வின் சகோதர நிறுவனங்களின் ஒன்றிணைந்த திட்டமாகும்.

இவ் நிகழ்ச்சித்திட்டத்தில் இருந்து UNHCR ஆனது 2005 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் விலகிக் கொள்ளும். அதே நேரத்தில் அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட நிறுவனங்கள் அபிவிருத்தி நடவடிக்கைகளை இக் கிராமத்தில் மேற்கொள்ளும். அதேநேரம் UNHCR ஆனது தொடர்ந்தும் தனது பாரம்பரியமான பாதுகாப்பு என்கின்ற ஆணை தொடர்பான நடவடிக்கைகளை இக் கிராமங்களில் தொடர்ந்தும் மேற்கொள்ளும்.



வடக்கு கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான நிறைவேற்றுத் திட்டத்தில் ஐ.எல்.ஓவின் தொழிற் பயிற்சி நடவடிக்கைகள் ஐ.எல்.ஓ. தற்போது ஒரு விசேடமாக வடிவமைக்கப்பெற்ற தொழிற் பயிற்சித்திட்டத்தை வடக்கு கிழக்கிலுள்ள விடுவிக்கப்பட்ட குறைந்த வயதான போராளிகளுக்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட பாதிப்புற்ற



சிறுவர்களுக்குமாக நிறைவேற்றுகின்றது.

2004ஆம் வருடத்தில் இத் தொழிற்பயிற்சித் திட்டத்தின் முதற்கட்டமாக, ஒரு அவசர தேவையென்ற முறையில், சில தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற் பயிற்சி நிறுவனங்கள் பங்காளர் நிறுவனங்களாக ஒவ்வொரு மாவட்டத்திலும் நியமிக்கப்பட்டுள்ளன. ஐ.என்.எஸ்.ஜீ.டி, பட்றீசியன் நிறுவனம் என்பவை யாழ்ப்பாணத்திலும், றிடோ கிளி டெக் சி.டபிள்யூ.டி.ஆர், என்பவை கிளிநொச்சியிலும், வாழ்வோதயம் மன்னாரிலும், கொம்டெக் வவுனியாவிலும், கைத்தொழில் திணைக்களம், கிரோஸ் கெயார் நிலையம் என்பவை திருகோணமலையிலும், எஸ்.கோ, சர்வோதயா, புனித ஜேம்ஸ் நிறுவனம் என்பவை மட்டக்களப்பிலும், ஸ்வோட் அம்பாறையிலும் இவ்வாறு நியமிக்கப்பட்ட நிறுவனங்கள் ஆகும். 2004 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாத அளவில், 600 இற்கு மேற்பட்ட சிறுவர்கள் இந்நிறுவனங்கள் மூலம் தொழிற் பயிற்சிகளுக்குச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு கட்டுவேலை, தச்சுவேலை, மின்இணைப்பு, படகு இயந்திரங்கள் திருத்துதல், தையல்வேலை, உணவு பதப்படுத்துதல், கால்நடை வளர்ப்புப் போன்ற பலவிதமான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தற்போது பயிற்சிகளை முடித்த அநேகமான சிறுவர்கள் ஒரு தொழிலிலோ அல்லது வருமானம் பெறக்கூடிய சுயதொழிலிலோ ஈடுபட்டுள்ளனர். பயிற்சியின் முடிவில் பயிற்சிபெற்ற தொழிலில் தொடர்ந்து ஈடுபடத்தேவைப்படும் உபகரணப் பொதியொன்று, ஒதுக்கப்பட்ட உதவிப்பணம் மூலம் ஒவ்வொரு சிறுவருக்கும் வழங்கப்படும்.

இப்போது, இத் தொழிற் பயிற்சி நிறைவேற்றுத்திட்டம், இரண்டாம் கட்டத்தை அடைந்துள்ளது. இக்கட்டத்தில், வடக்கு கிழக்கில் தொழிற் பயிற்சி வழங்கும் முறையின் முன்னேற்றம் முக்கியத்துவம் பெறுகின்றது. சிறுவர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்குவது தொடர்கின்ற அதேவேளையில், திட்டத்தின் மேலதிக குறிக்கோள்களாகத் தற்போது இப்பிரதேசத்தில் தொழிற் பயிற்சி வழங்கும் நிறுவனங்களின் தரத்தை மேம்படுத்த சமூக மட்டத்திலான தொழிற் பயிற்சி வழங்கும் முறையை உருவாக்குதலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக இரு மூலோபாயங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்று தற்போதைய தொழிற் பயிற்சி நிறுவனங்களின் நிலை ரீதியான பயிற்சி முறையையும், நடமாடும் பயிற்சி முறையையும் வலுப்படுத்தலாகும். இரண்டாவது சமூக மட்டத்தில் பயிற்சி முறையோடு ஒன்றிணைந்து உற்பத்தி நிலையைக் கிராம மட்டத்தில் உருவாக்குதலாகும். இவ்விரு மூலோபாயங்களும், மாவட்ட ரீதியாகத் தேர்ந்தெடுக்கபட்ட பங்காளர் நிறுவனங்கள் மூலமாக நிறைவேற்றப்படும் பங்காளரின் தன்மையும், பயிற்சியின் நிலைமையும் கருத்திற்கொண்டு இந்த மூலோபாயங்களில் மாற்றங்கள் கொண்டு வரப்படலாம். தற்போது ஐ.எல்.ஓ. ஒரு நிலைய ரீதியான பயிற்சி முறையை வலுப்படுத்தும் மாதிரித்திட்டமாக கிளிநொச்சி றிடோ நிறுவனத்தோடு இணைந்து, கல்வி, திறமை அபிவிருத்திக்கான நிலையமொன்றை (Educational and skills development center) ஆரம்பிக்கின்றது. அத்தோடு, வெகு விரைவில் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் சமூக ரீதியான பயிற்சி முறையும், உற்பத்தி நிலையமும் ஒன்றிணைந்தஒரு திட்டமொன்று சி.டபிள்யூ.டி.ஆர் (CWDR) நிறுவனத்தின் மூலம் நடை முறைப்படுத்தப்படும் முதலாவது திட்டத்தின் கீழ் 300 சிறுவர்களும், இரண்டாவது திட்டத்தின் கீழ் 600 சிறுவர்களும் பயனடைவார்கள்.

இந்த நிறைவேற்றுத்திட்டத்தில் ஐ.எல்.ஓ.வின் அர்ப்பணிப்பின் தொடர்ச்சியாக பயிற்றுவிப்பாளர்களுக்கு பயிற்சியளித்தல், உகந்த பாட விதானங்களையும், பயிற்சி மூலகங்களையும், நூல்களையும் தமிழில் விருத்தி செய்தல், பயிற்சிக்கான நவீன உத்திகளையும், தொழில் நுட்பங்களையும், உபகரணங்களையும் பெற்றுக் கொடுத்தல் ஆகிய நடவடிக்கைகள் வடக்கு கிழக்கில் தொழிற் பயிற்சி வழங்கும் முறையை வலுப்படுத்துவதற்காக மேற் கொள்ளப்படுகின்றன.

---

**கல்விக்கான உணவு வழங்கும் திட்டம்:-**

வயிற்றுக்கு முழுமையாக உணவு கிடைக்கும்போது, மாணவர்களின் கற்றல் திறன் மேம்படுகின்றது. இதில் உலக உணவுத்திட்டமானது வலயக் கல்விப் பணிமனையுடன் இணைந்து தரம் 01-09 வரையான வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு போசனை மிக்க காலை இடைவேளை உணவை வழங்குவதன் மூலம், மாணவர்களிடையே உயர் பாடசாலை வரவு வீதம், குறைவான இடைவிலகுவோர் வீதம், கல்வியில் உயர்தேர்ச்சி மட்டம் என்பவற்றையடைய ஊக்கமளிக்கின்றது. "2005ஆம் ஆண்டில் இத்திட்டமானது, வன்னிப் பெருநிலப்பரப்பில் முற்று முழுதாக விஸ்தரிக்கப்படும். அண்மைய கலவரங்கள் பாடசாலை செல்லும் அனேக மாணவர்களின் கல்வியை வெகுவாகப் பாதித்துள்ளது. இதன் காரணமாக அனேக மாணவர்கள் கல்வியில் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றார்கள். உலகஉணவுத் திட்டமானது, GTZ மற்றும் UNICEF நிறுவனங்களுடன் இணைந்து வன்னிப்பெருநிலப்பரப்பு முழுவதுமுள்ள ஆரம்ப மற்றும் இடைநிலை மாணவர்களுக்கு இழந்த கல்வியை மீளப்பெறும் திட்டத்திற்கு போசாக்கான மதிய உணவினை வழங்கி வருகின்றது.

**தாய் சேய் போசாக்குத்திட்டம்:-**

*பிரதியீட்டு உணவூட்டல்*

போசாக்கு இன்மையின் தீய விளைவுகளால் அதிகளவில் பாதிக்கப்படும் குழுவினராக கர்ப்பிணித்தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் சிறிய குழந்தைகள் உள்ளனர்.இக்குழுவினருக்கு போதியளவு போசனை உள்ளீடுகள் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காக உலக உணவுத்திட்டமானது சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்து போசனை மிக்க அரைத்த சோளன் சோயா மாவினை அனைத்துக் கர்ப்பவதிகள், பாலூட்டும் தாய்மார்கள், மற்றும் 3வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வழங்குகின்றது.

*சுகாதார விழிப்புணர்வும், உணவுச் செய்முறையும், பயிற்சியும்:-*



உலக உணவுத்திட்டமானது, அரைத்த சோளன் சோயாமாக் கலவையினைப் பெற்றுக் கொள்ளும் பயனாளிகளுக்குப் பிள்ளைப்பராய அபிவிருத்தி மற்றும் உணவுச் செய்முறைப் பயிற்சி நெறிகளை வழங்குவதற்குத் தொடர்ந்தும் நிதியுதவியினைச் செய்து வருகின்றது. இப்பயிற்சி நெறியானது இலக்குப் பயனாளிகளின் ஆரோக்கியமான வாழ்நிலைச் சூழலையும், வாழ்க்கை முறையையும், உயர்த்துவதில் அந்தக் குடும்பங்களை ஆரோக்கியமான சுகாதாரப்பழக்க வழக்கங்களைக் கடைப் பிடிக்கத் தூண்டுகின்றது.

**போசனை நிலைக் கண்காணிப்பும், ஆய்வும்:-**

வன்னிப்பெருநிலப்பிரப்பிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனையினருக்கு பாதிப்படையும் குழுவினரின் சுகாதார நிலை தொடர்பான தகவல்களை மையப்படுத்துவதற்காக தகவல் தொழில் நுட்பச் சாதனங்களை வழங்கியதுடன், அது தொடர்பான பயிற்சிகளையும் வழங்கி வந்துள்ளது. போசனை நிலவரத்தினை முறையாக மதிப்பிட்டு அறிந்து கொள்வதற்கும், தேவைப்படுமிடத்து சரியான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் உதவுகின்றது. அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 5வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளினதும் போசாக்கு நிலைமையினை அறிந்து கொள்ளும் முகமாக உலக உணவுத்திட்டமானது பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனை யினருடனும், மற்றும் மருத்துவ ஆய்வு நிறுவனம் உள்ளூர் சுகாதார சேவைகள் நிறுவனம் ஆகியோருடனும் இணைந்து முற்று முழுதான ஆய்வொன்றினைச் செய்து முடித்துள்ளது. இரண்டு தசாப்தங்களின் பின் இப்பிரதேசத்தில் போசாக்கு நிலை விபரம் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்பட்ட முதலாவது ஆய்வு இதுவாகும். மிக விரைவில் இவ்வாய்வு தொடர்பான முடிவுகள் வெளியிடப்படும்.

**சமூக சொத்துக்களை உருவாக்கலும் உட்கட்டுமான புனருத் தாரணமும் வேலைக்கான உணவு:-**

இரண்டு தசாப்த காலமாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாகப் பெரும்பாலான விவசாய உட்கட்டமைப்புக்கள் அழிக்கப்பட்டன அல்லது பராமரிப்பின்றி கைவிடப்பட்ட நிலையிலுள்ளது. மீளக் குடியேறும் உள்ளூர் இடப்பெயர்வாளர்களுக்குத் துரித சமூக பொருளாதார புணருத்தாரணமானது வன்னியில் அவசியுமாகின்றது. உதாரணமாக விவசாயக் குளங்கள், கால்வாய்கள் விவசாய நிலங்களுக்கான பாதைகள் போன்றவை அடங்குகின்றன.

உலக உணவுத்திட்டமானது, வன்னி முழுவதற்குமான உணவுக்கான வேலை நடவடிக்கைகளை இலங்கையரச திணைக்களங்களூடாகவும், உலகதரிசன நிறுவனத்தினூடாகவும், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தினூடாகவும் இணைந்து உணவினை வழங்கி வுருகின்றது.

வேலைக்கான உணவுத்திட்ட நடவடிக்கையானது குறுகிய கால நோக்கில் நலிவுற்ற மக்களுக்கான ஏனைய வேலை வாய்ப்பு அற்ற சந்தர்ப்பத்திலும் வளமற்ற காலத்திலும் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துகிறது.

விவசாய சமூகக் கட்டமைப்புக்களை புணருத்தாரணம் செய்வதன் மூலம் உணவு உற்பத்தியை அதிகரிப்பதுடன் அதன்மூலம் நீண்ட காலத்திற்குத் தமக்கான உணவுப் பாதுக்காப்பினை உறுதிப்படுத்துகின்றது.

**மனிதவள அபிவிருத்தி**

இரண்டு தசாப்த காலமாக இடம்பெற்ற பாரிய இடப்பெயர்வு களாலும், கல்வி கற்பதற்கான வசதியற்ற தன்மையும், வேலைவாய்ப்பற்ற தன்மையும் வன்னிக்கான தொழில் சார் திறனுடையவர்களின் அதிகரிப்பைக் குறைத்தது. இதனால் தொழில் பயிற்சி என்பது மிகவும் அவசியமான ஒன்றாக இனங்காணப்பட்டு ஆற்றலுள்ள பயனாளிகள் இலக்காகக் கொள்ளப்பட்டனர். அதன் மூலம் அவர்கள் தமது உழைக்கும் ஆற்றலையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திக் கொண்டனர்.

உலக உணவுத்திட்டமானது வன்னி முழுவதும் பல்வேறுபட்ட தொழிற்பயிற்சி வழங்கும் நிறுவனங்களுக்கு உதவி செய்து வருகின்றது. உதாரணமாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் ஆசியாவிற்கான ஜப்பான நட்புறவுப்பாலம் கிளி. தொழில் நுட்பக் கல்லூரி மற்றும் அரச முகவர் நிறுவனங்கள் என்பனவாகும்.

ஒவ்வொரு நாள் பயிற்சிக்கும், ஒவ்வொரு பயனாளிகளுக்கும் ஒரு குடும்பத்திற்கான உணவு வழங்கப்படுகிறது. ஏனெனில் இவர்களின் பயிற்சிக் காலத்தில் ஏனைய தொழில்களில் ஈடுபட முடியாது. எனவே அவர்களின் குடும்பத்தினது உணவுப்பாதுகாப்பினை சரியான விதத்தில் உறுதிப்படுத்தும்போது அவர்களது பொறுப்புக்கள் குறைக்கப்பட்டு இலகுவாகக் கல்வியினைத் தொடர வழி வகுக்கின்றது.

**பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு கடன் உதவி வழங்கல்**

**சுழற்சி முறைக்கடன் வழங்கல் திட்டம்**

கிளிநொச்சி மாவட்டத்தில், உலகஉணவுத் திட்டமானது 300 குடும்பத் தலைவிகளுக்கு 2004 ஆம் ஆண்டில் சுழற்சிக் கடன் திட்டத்தை அமுல்படுத்துகின்றது. இத்திட்டமானது அரச அதிபர், மாவட்டச் செயலாளர் மற்றும் உள்ளூர்க் கிராமிய மட்ட அமைப்புக்களால் நிர்வகிக்கப்படுகின்றது. பொதுவாக இக் கடன்கள் சிறு கைத்தொழில் அபிவிருத்தி, கால்நடை வளர்ப்பு, மற்றும் விவசாய உள்ளீடுகள் போன்றவற்றிற்குப் பாவிக்கப்படுகின்றது.

# குடாநாட்டில் சட்டம், ஒழுங்கைப் பேண படையினரை ஒத்துழைக்க வலியுறுத்து

(வடமராட்சி)

**யாழ்.குடாநாட்டில் சட்டம் ஒழுங்கைப்பேண சிறிலங்காப் பொலிசாருக்குப் போதிய ஒத்துழைப்பினை படைத்தரப்பு வழங்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

இவ்விடயம் தொடர்பாக யாழ். நீதிமன்றில் கூட்டப்பட்ட விசேட கூட்டமொன்றில் நேற்று முன் தினம் விரிவாக ஆராயப்பட்டுள் ளது. யாழ்.நீதவான் இ.த. விக்கினராஜாவினால் கூட்டப்பட்டி ருந்த இக் கூட்டத்தில் யாழ். மாவட்ட சிறிலங்காப் படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜென ரல் சுனில் தென்னக்கோன் தலை மையிலான படை உயரதிகாரிக ளும் யாழ்மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகரும் கலந்து கொண் டிருந்தனர்.

அண்மைக்காலமாக மீண்டும் யாழ்.குடாநாட்டில் சட்டம் ஒழுங்கு மோசமாக பாதிக்கப்பட்டு வருவ தாக பலதரப்புகளாலும் குற்றச் சாட்டுக்கள் எழுப்பப்பட்டு வரு கின்ற நிலையிலேயே இச்சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

குறிப்பாக படையினரது கட் டுப்பாட்டின்கீழிருக்கும் அரி யாலை கிழக்குப் பகுதியிலிருந் தான மண்கடத்தல் தொடர்பாக விரிவாக ஆராயப் பட்டிருப்பதாக கூறப்படுகின்றது. இப்பகுதியினில் தொடர்ந்து இடம் பெற்று வரும் சட்டவிரோத மண் அகழ்வினைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கு மாறு யாழ். பொலிசாருக்கு நீதி மன்றுஅண்மையில் உத்தர வொன்றைப் பிறப்பித்திருந்தது. குறிப்பாக அப்பகுதியிலுள்ள இராணுவ முகாமில் தங்கியிருந்து சட்ட விரோத மண் அகழ்வினைக் கட்டுப்படுத்த பொலிசாருக்கு ஆலோசனையும் நீதிமன்றால் வழங்கப்பட்டிருந்தது.

எனினும் இவ்விடயங்களிலும் படைத்தரப்பு தொடர்ந்து ஒத்து ழைப்பினை வழங்கவில்லை யென நீதவானின் கவனத்திற்கு யாழ்.பொலிசார் கொண்டுவந்துள் ளதாகத் தெரியவருகிறது.

இதையடுத்து சட்டம் ஒழுங்கு பேணும் விடயத்தில் படைத்தரப்பு பொலிசாருக்கு ஒத்துழைக்க வேண்டுமென கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ். குடா நாட்டினில் முக்கிய குற்றச் செய லாக நிகழ்ந்து வரும் கசிப்பு உற் பத்தி மற்றும் பாவனை உயர் பாதுகாப்பு வலயத்தை அண்டிய மக்கள் குடியமராத கிராமப்புறங் களிலேயே அதிக அளவில் இடம் பெற்று வருவதாக தெரியவந் துள்ளது. (27)

## நெற்பயிரை மழை வெள்ளத்தின் அழிவிலிருந்து பாதுகாக்கக் கோரல்

(தென்மராட்சி)

கச்சாய் குளவெளியில் கமம் செய்யும் விவசாயிகளின் விளைநிலங்களில் இருந்த வாய்க்கால்கள், மதகுகள் உடைந்து தூர்ந்து போயுள்ளதால் இப்பிரதேசத்தில் 75 ஏக்கர் பரப்பளவில் நெற்செய்கை பண்ணும் விவசாயிகளின் நெல்வயல்கள் கடந்தசில வருடங்களாக நீரில் மூழ்கி அழிந்துபெரும் சேதத்தை ஏற்படுத்தி வருவதாகத் தெரியவருகிறது.

இது குறித்தும், விவசாயிகளின் நிலைமை குறித்தும் விளக்கங்களுடன் குறைபாடு ஒன்றை தென்மராட்சி பிரதேச செயலாளர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்துறை தேசிய எழுச்சிப்பேரவை போன்ற வற்றின் கவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இது குறித்து விவசாய சம்மேளனம், கமநலசேவைத் திணைக்கள அதிகாரிகளின் கவனத்திற்கு முறைப்பாடு செய்த போதும், கமநல சேவைத் திணைக்கள அதிகாரிகள் இது பிரதேசசபைக்குரிய வேலையென்றும் கூறியுள்ளர்கள். பிரதேசசபை அதிகாரிகளிடம் விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் முறைப்பாடு செய்தபோது இது தமக்குரிய வேலை இல்லை என்று கூறியுள்ளனர். இதனால் விவசாயிகள் அதிகாரப்போட்டிகளுக்கு' மத்தியில் பந்தாடப்படுவதாகத் தெரியவருகிறது.

மழைகாலம் நெருங்கிவரும் இந்தச்சூழ்நிலையில் சம்பந்தப்பட்டதரப்புக்கள் ஒருவரை ஒருவர் சாட்டுப்போக்குச் சொல்லி தப்பிக்கொள்ளாமல் பாதிக்கப்படவுள்ள விவசாயிகளின் துயர் துடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். (28)

# வடமராட்சியில் முன்பள்ளிச் சிறார்களில் 60 வீதமானோர் போஷாக்கின்றிப் பாதிப்பு

## வலயக் கல்விப் பணிமனை தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சியில் வாழும் முன்பள்ளிச் சிறார் களில் 60 வீதமானோர் போஷாக்கின்மையால் பாதிக் கப்பட்டிருப்பதாக வடமராட்சி வலய கல்விப் பணி மனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த கால யுத்தம் அதன் விளைவாக ஏற்பட்ட சொத்தழிவு மற்றும் தொழில் வாய்ப்பு இன்மை காரணமாக மேற்படி பிரதேச வாழ் மக்களில் அதிகள வானோர் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாகவே இப்பகுதி சிறார்களுக்கு போஷாக்கின்மை காணப்படுவதாக சுட்டிக்காட்டப் படும் அதே வேளை வறுமையால் பாதிக்கப்பட்டு போஷாக்கு நிலைமையில் பின்தங்கிப் போயுள்ள சிறார்களுக்கான சத்துணவுத் திட்டங்களை நடை முறைப்படுத்த உரிய தரப்பினர் முன்வரவேண்டும் எனப்பலரும் கோரிக்கை விடுத்துவருகின்றனர். (33)

# கூட்டுறவுச் சங்கக்கிளை புதிய இடத்தில் இயங்குகிறது

(தென்மராட்சி)

கடந்தகால சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பு யுத்தம் காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்வினால் மூடிக்கிடந்த தவசிகுளம் கூட்டுறவுச் சங்கக்கடை மீண்டும் புதிய இடத்தில் இயங்கத் தொடங்கியிருக்கிறது.

இப்பகுதி மக்களின் அயராத முயற்சியினாலும் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் எடுத்த பங்களிப்பினாலும் இக் கூட்டுறவுச்சங்கங்கடை புத்துயிர் பெற்றிருப்பதாக இக்கிராமத்தின் அபிவிருத்திக்குழுவின் பிரதிநிதிகள் இராசையா மற்றும் ஜீவனம் ஆகியோர் தெரிவித்தனர்.

இதற்கு முன்னர் இக்கிராம மக்கள் கொடிகாமம் சென்றே உலர் உணவுப்பொருட்களை எடுக்கும் நிலை இருந்ததாகவும் இப்பொழுது இக்கூட்டுறவுக்கடை திறந்ததினால் அலைச்சல், நேரம் வீணடிப்புக்கள் தவிர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (28)

# யாழ்.கல்வியற் கல்லூரியை சீராக இயங்க வைக்க நடவடிக்கை

(நல்லூர்)

யாழ்ப்பாணம் கல்வியற் கல்லூரி ஆண்கள் கடந்த இரு வாரங்களாக கல்லூரியில் இருந்து மலசல கூடம் நிரம்பியதாகக் கூறி வெளியேற்றப்பட் டிருப்பது நிர்வாகத்தின் திட்டமிட்ட பழிவாங்கல் நடவடிக்கையென மாணவர்கள் கூறுகிறார்கள்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் ப.பகீரதன் தலைமையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி முதலாம், இரண்டாம் வருட ஆண் மாணவர்களுடனான சந்திப்பு நேற்று முன் தினம் பிற்பகல் பேரவை மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

இச்சந்திப்பின் போது தமிழீழ கல்விமேம்பாட்டு பேரவை துணைப் பொறுப்பாளர் அருள் மாஸ்ரர், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இணைப்பாளர் கண்ணன்,யாழ்.மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப் பாளர் எழிலன்பன்,பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளர் விசிதரன் ஆகியோரும் கலந்து கொண் டனர்.கல்வியற்கல்லூரியை அடுத்த வாரத்திற்கு இடையில் ஆரம்பிப்பதற்கு வேண்டிய நடவடிக் கையை மேற்கொள்வதாக மாணவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. (41)

# பாடசாலைகளில் குடிநீர் வசதி யுனிசெவ் வழங்க முன் வருகை

(வடமராட்சி)

யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து வலயங்களையும் சேர்ந்த 72 பாடசாலைகளுக்கான குடிநீர் வசதிகளை ஏற்படுத்தி வழங்க ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் முன்வந்துள்ளது. சுமார் 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் குடிநீர் தாங்கிகளை அமைத்து வழங்க நட வடிக்கை எடுத்துள்ளது.

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் 14 பாட சாலைகளிலும், வடமராட்சியில் 15 பாடசாலைகளிலும், தென்மராட்சி பகுதியில் 15 பாடசாலைகளிலும் வலிகாமத்தில் 15 பாடசாலைகளிலும் மற்றும் தீவக கல்வி வலயத்தின் 13 பாடசாலைகளிலுமே நிரந்தர குடிநீர் தாங்கிகள் அமைத்து வழங்கப்படவுள்ளன.

இதனிடையே தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளிலுள்ள குடிநீர் மாதிரிகளை ஆய்வுக்குட்படுத்தும் பணியினை உரிய தரப்புகள் தற் போது மேற்கொண்டுள்ளன. (27)

## இன்று வெள்ளிவிழா

வடமராட்சியில்உள்ள கோவிற் கடவை சனசமூக நிலையத்தின் வெள்ளிவிழா இன்று சனசமூக நிலைய முன்றலில் மாலை 6மணி யளவில் ஆசிரியர் ச. உருத்திர குமார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசி யல்துறைபொறுப்பாளர் மற்றும் தமிழ் தேசியக் கூட்ட மைப்பு பாராளுமன்ற உறுப்பினாகள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (33)

# கடற்றொழில் உபகரணம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஊர்காவற்துறையில் வாழ்ந்து வரும் 55 கடற்றொழி லாளர்களுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மற் றும்இடப்பெயர்வுகள் என்பவற்றால் பாதிக்கப்பட்டு மிக மோச மாகப்பின்தங்கிப் போயுள்ள மேற்படிப் பிரதேச மீனவர்களின் தொழிற் துறை மேம்பாட்டினைக் கவனத்தில் கொண்டே இவ்வாறான உபகர ணங்களை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியுள்ளது.

அந்த அடிப்படையில் மேற்படி கடற்றொழிலாளர்கள் 55 பேரைத் தெரிவு செய்து அவர்களின் தொழிற்துறை மேம்பாட்டிற்கு வேண்டிய வலைகள், இயந்திரங்கள் என்பவற்றை ஐரோப்பிய ஒன்றியம் வழங் கியுள்ளது. (33)

# ஜாதிக ஹெல உறுமயவிலிருந்து விலகிய திலக்கருணாரட்ணவுக்கு பிரச்சினை

ஜாதிக ஹெல உறுமயவில் இருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துள்ள திலக் கருணாரட்ணவுக்கு பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டு வருவ தாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் ஒருகட்டமாக கடந்த வியாழக்கிழமை திலக் கருணாரட் ணவின் மகன் மகேந்திர கருணா ரட்ணவின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அத்துடன் அவரின் வீட்டின் முன்புறமாக கைவிடப்பட்ட நிலையில் சிற் றூந்து ஒன்று கண்டுபிடிக்கப் பட்டு பின்னர் அது பொலிசாரிடம் கையளிக்கப்பட்டது. இந்த நிலை யில் ஜாதிக ஹெல உறுமயவின் உட்கட்சிப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட வேண்டும் என திலக் கருணா ரட்ண கருத்துத் தெரிவித் துள்ளார். ஜாதிக ஹெல உறுமய வின் பிரச் சினையை முடிவுக்கு கொண்டுவரவேண்டுமானால் அந்தக்கட்சியின் பௌத்தபிக்குகள் தமது கடினப்போக்கை கைவிட வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

# பல்கலை மூடப்பட்டமைக்கு மாணவர்கள் கண்டனம்

(கொழும்பு)

கொழும்பு நாவலயில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மறுஅறிவித்தல்வரை மூடப்பட்டுள்ளது. வியாழக்கிழமை மாலை மாணவர்களுக்கும் நிர்வாகத்துக்கும் இடையில் ஏற்பட்ட முறுகலை அடுத்தே திறந்த பல்கலைகழகம் மூடப்பட்டுள்ளது. இதனையடுத்து பல்கலைகழக வளாகம் மாணவர்களுக்கு தடை செய்யப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது

இந்தநிலையில் கடந்த ஒரு மாதக் காலமாக கல்விசாரா ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பால் கல்வி நடவடிக்கைகளின்றி இருந்த திறந்த பல்கலைக்கழகம் சிறிய பிரச்சினைக்காக மீண்டும் மூடப்பட் டுள்ளமையை மாணவர்கள் கண்டித்துள்ளனர். (32)

## -உயர் நீதிமன்ற அவமதிப்பு விவகாரம்

# எழுத்து மூலமான விளக்கத்தை எஸ்.பி திஸாநாயக்க சமர்ப்பித்தார்

(கொழும்பு)

உயர் நீதிமன்றத்திற்கு களங்கம் விளைவிக்கும் வகையில் தாம் தெரிவித்ததாகக் கூறப்பட்டு தாக் கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான எழுத்து மூல விளக்கத்தை முன் னாள் அமைச்சர் எஸ். பி.திஸா நாயக்க சமர்ப்பித்துள்ளார்.

இந்த விளக்கம் நீதிமன்றப் பதி வாளரின் ஊடாகத் தலைமை நீதி யரசருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து தலைமை நீதிய ரசர் எஸ் பி.திஸாநாயக்கவின் விளக்கத்தை உயர்நீதிமன்றத்தில் குறிப்பிட்ட மனுவை விசாரணை செய்து வரும் ஐவர் அடங்கிய நீதியரசர் குழுவிற்குக் கையளித் துள்ளார். ஏற்கனவே தமக்கு எதி ரான மனு தொடர்பில் எஸ். பி. திஸாநாயக்க பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. உனவட்டுன பகு தியில் வைத்து கடந்த நவம்பர் மாதத்தில் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்த கருத்துக்கள் உயர் நீதிமன்றத்தை அவமதிப்பதாக அமைந்திருப்பதாகக் கூறி, பிர தேசத்தின் இருவர் இந்த மனு வைத்தாக்கல் செய்துள்ளனர். (32)

# மருத்துவப் பீட பட்டதாரிகளுக்கு பொது பல்தேர்வு வினாப்பரீட்சை

(கொழும்பு)

நாடெங்கிலும் உள்ள மருத்துவப் பீடங்களிலிருந்து வெளியேறும் வைத்திய பட்டதாரிகளுக்குப் பொதுவான பல்தேர்வு வினாக்கள் பரீட்சை ஒன்றை நடத்துவது குறித்து அரசு கவனம் செலுத்தியுள்ளது.

அடுத்த வருடம் முதல் இதனை அமுற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருப்பதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் ரஞ்சித் மென்டிஸ் தெரிவித்துள்ளார். தற்போது பல்கலைக் கழகங்களில் உள்ள மாணவர்களுக்கு அரசு நியமனங்களை வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் பல்தேர்வு வினா முறையானது ஏற்றுக்கொள்ள முடியாதிருப்பதாக வைத்தியபீட மாணவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். தற்போதுள்ள முறை தங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். Z ஸ்கோர் இதற்கு பயன் படுததப்படுவதால் தகுதியான மாணவர்களுக்கு, அதிவிசேட சித்தி கிடைக்க பெறுவதில்லையென கொழும்பு பல்கலைக் கழகத்தின் வைத்திய பீட மாணவர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் இவ்வாண்டு நடைபெறவிருந்த பல்தேர்வு வினாப் பரீட்சை இடை நிறுத்தப்பட்டுள்ளது.

# -கண்டாவளைப் பிரதேசத்தில்- முன்பள்ளிப் பெற்றோர் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

கிளி/வலயக்கல்விப் பணிமனையின் அனுசரணையுடன், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம் , உள்ளூர் அரசசார் பற்ற நிறுவனங்கள் ஆகியன ஒருங்கிணைந்து கண்டாவளைப் பிரதேச முன்பள்ளிப் பெற்றோர் விழிப்புணர்வுச் செயற்பாட்டுக் கருத்தரங்கொன்றை வியாழக்கிழமை கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவன மண்டபத்தில் நடத்தின.

முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் சிவநாதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்துரைகளை கிளி. வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்ட இணைப்பாளர் இ.ராஜன், கண்டாவளைப் பிரதேச செயலக நிர்வாக அலுவலர் கனகேந்திரன், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர் செல்வி.யோ. நிலா,சிறுவர் நலன் திட்ட மாவட்ட விழிப்புணர்வு அலுவலர் கனேந்திரன் ஆகியோர் வழங்கினர். இந் நிகழ்வில் 50 முன்பள்ளிப் பெற்றோர்கள் பயன்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# சம்பள நிலுவை வழங்காவிட்டால் போராட்டத்தில் ஈடுபடத்தயார்

-மன்னார் மாவட்ட ஆசிரியர்கள் தெரிவிப்பு

(மன்னார்)

1998ஆம் ஆண்டிலிருந்து ஆசிரியர்களுக்கு வழங்கப்படாதிருந்த சம்பள நிலுவைக்கொடுப்பனவு ஏனைய மாவட்டங்களில் வழங்கப்பட்ட போதிலும், இதுவரையிலும் மன்னார் மாவட்டத்திற்கு வழங்கப்படாததால் மன்னார் மாவட்ட ஆசிரியர்கள் கவலையடைந்துள்ளனர்.

மன்னார் ஆசிரியர்கள் உயர்மட்டங்களுக்கு இதைத் தெரிவித்த போதிலும் பலன் கிட்டாமையினால் தாம் சாத்வீகப் போராட்டத்தில் இறங்கவுள்ளதாக ஆசிரிய சமூகத்தினர் கூறியுள்ளனர். (மி)

# பூநகரிப் பகுதி மாணவர்களுக்கு கணினி அறிமுக நிகழ்வு

(பூநகரி)

பூநகரிப் பகுதியில் மாணவர்களுக்குக் கணினியை அறிமுகப் படுத்தும் நிகழ்வு நடைபெற்றுள்ளது. கடந்த திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு பூநகரி வன்னி தொழில்நுட்பவியல் நிறுவன ஆசிரியர் துஷ்யந்தனின் தலைமையில் பூநகரி மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிருஷ்ணனின் அனுசரணையுடன் பிற்பகல் 2.15 மணி வரை பூநகரி ம.வி இல் கல்விகற்கும் தரம் 1தொடக்கம் தரம்-13 வரையான மாணவர்களுக்கான கணினி பற்றிய பகுதிகளைத் தனித் தனியாகக் குறிப்பிட்டு அறிமுகம் செய்ததுடன் செயற்பாடுகள் பற்றியும் எடுத்துக் கூறினார். தொடர்ந்து பிப 2.30 மணிக்கு கறுக்காய்த்தீவு ம.வி. இல் அதிபர் சு.கணபதிப் பிள்ளை தலைமையில் இவ்வறிமுகச் செயற்பாடு நடைபெற்று பிற்பகல் 5.15 மணிக்கு மாணவன் பா.பார்த்தீபனினதும் ஆசிரியை சிறிஸ்கந்தநாயகியினதும் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுற்றது. (34)

# பேசாலை கிராமிய வைத்திய சாலையில் போதிய பௌதிக வளங்கள் இல்லை

(மன்னார்)

மன்னார் பேசாலை கிராமிய வைத்திசாலை பௌதிக வளங்கள் இன்றி நீண்டகாலம் இயங்கி வருகின்றது. நோயாளர்கள் இங்கு தங்கி இருந்து சிகிச்சை பெறும் வசதிகள் உள்ள போதிலும் நோயாளர்கள் தங்குமிடங்கள் மிகவும் மோசமாகவே உள்ளன. இதற்கென 7 மில்லியன் ரூபாவைச் சுகாதாரத் திணைக்களம் ஒதுக்கீடு செய்த போதிலும் இதற்குரிய ஆரம்ப வேலைகள் கூட ஆரம்பிக்கப் படவில்லை. அத்துடன் மின்சார வசதிகள் ஒழுங்காக இல்லை. மின்விளக்குகள், மின்விசிறிகள் பழுதுபட்ட நிலையிலேயே உள்ளன. அத்துடன் மலசல கூடங்கள் நீண்ட நாட்களாகத் திருத்தப்படாமல் உள்ளன. இவ்வாறான பல குறைபாடுகளுடன் இயங்கும் பேசாலை வைத்திய சாலையை கவனத்திலெடுத்து குறைகளை நிவர்த்தி செய்யுமாறு இங்குள்ள பொது அமைப்புக்கள் உயர் அதிகாரிகளைக் கேட்டுள்ளன.(மி)


## பணிநிலை வேண்டுகை

போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் சோதனை நிலையங்களுக்கு எழுதுனர் பணிநிலைக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

தகைமை:-01) க.பொ.த (சா/த) தமிழ்,கணிதம் உட்பட ஆறுபாடங்களில் தேர்ச்சி.

02) க.பொ.த(உ/த) மூன்று பாடங்களில் தேர்ச்சி

ஊதியம்:- நேரில் தீர்மானிக்கப்படும்.

தகுதியுடையவர்கள் (இருபாலாரும்) 2004-11-01 ஆம் திகதிக்கு முன்னர் தன் வரலாற்றுச் சான்றிதழ்களுடன் நடுவப்பணியகம், போ.க.பிரிவு.கிளிநொச்சி என்னும் முகவரிக்கு வருக.

போ.க.பிரிவு,
கிளிநொச்சி

(5212)



"விடியல் காணவே வேள்வி செய்து தாய்
மடியில் உறங்குமா வீரர் நினைவினில்"

## யாழ்.மாவட்ட தனியார் போக்குவரத்துச்சேவைச் சங்கங்களின் ஒன்றியத்து ஏற்பாட்டோடு

## மாவீரர் நினைவுதின விழா
## கலைநிகழ்வுகளும்-போட்டி நிகழ்வுகளும்

காலம்:- 21.11.2004 ஞாயிற்றுக்கிழமை (மாவீரர்வாரத்து முதலாம் நாள்)

இடம்:- யாழ். வீரசிங்கம் மண்டபக் கரையரங்கில்

### போட்டி நிகழ்வுகளின் விபரம்- நாடகம்,கவிதை, கட்டுரை

**01. நாடகப்போட்டி (நிபந்தனைகள்)**

அ. 45 முதல் 50 நிமிடங்களுக்குள் இடம்பெறுபவையாக
ஆ. ஏற்கனவே போட்டிகளில் கலந்துகொள்ளாத ஓரங்க நாடகங்களாக.
இ. பாரம்பரிய,பண்பாட்டு அடையாளங்களை அழிக்கும் கலை- கலாச்சாரம் பிறநிகழ்வுகளை ஒழிப்பனவையாக,
ஈ. இன,மொழி, பிரதேச விடுதலையை வென்றெடுக்கத் தடையாக உள்ள ஒடுக்குமுறைகளைத் தகர்ப்பனவையாக,
உ. பகுத்தறிவுச் சூழலைப் படைப்பனவையாக -இருத்தல் வேண்டும்.

**02. கவிதைப்போட்டி (நிபந்தனைகள்)**

அ.தலைப்பு-சேர்ந்து வடம் பிடிப்போம்.
ஆ.250 முதல் 300 சொற்களுக்கு இடைப்பட்டனவையாக - சுயஆக்கமாக
இ. A4 தாளில் ஒவ்வொரு தாளிலும் ஒவ்வோர் பக்கமே எழுதப்பட்டோ, அன்றித் தட்டச்சு கணினி லம் பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
ஈ. கவிதைகளில் கீழ்வரும் உ ணர்வுகளில் ஒன்று பிரதிபலிக்க வேண்டும்.
i சமூக உணர்வு
ii தேச விடுதலை முன்னெடுப்பு
iii மாவீரர் தியாகத்தின் மதிப்பு
iv பகுத்தறிவு பண்பாடு
v பைந்தமிழர் வீரவரலாறு

**03. கட்டுரைப்போட்டி (நிபந்தனைகள்)**

அ. மாணவர் மட்டுமே பங்குபற்றக் கூடியது.
ஆ. 700 முதல் 750 சொற்கள் கொண்டதாக இருத்தல் முக்கியமானது.
இ. பாடசாலை வகுப்பாசிரியர் / அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
ஈ. தலைப்பு
i தேவை ஒரு சுதந்திர வாழ்வு
ii தாயகமும்- தேசியமும்
iii தாயக வரலாறும்- தமிழர் பண்பாடும்
iv விலங்கொடு வாழ்வதா? விடுதலை வேண்டுமா?
v யுத்தநிறுத்த அமைதி சலுகைகளின் வாய்ப்புகளுக்காகவா? வர்த்தக விளம்பரங்களுக்காகவா?

2 A-4 தாள்களில் ஒவ்வோர் பக்கமும் எழுதப்பட்டோ அன்றித் தட்டச்சு. கணினி மூலம் அச்சடிக்கப்பட்டோ உங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பிவைக்கலாம். போட்டிகளுக்கு பெறுமதி மிக்க 1 ஆம்,2 ஆம் ,3 ஆம் பரிசுகளோடு ஆறுதற் பரிசுகளும் வழங்கப்படும். பிரவேசங்கள் இலவசம்.

**விண்ணப்ப முடிவுத்திகதி:-05.11.2004(வெள்ளிக்கிழமை)**

கவிதை,கட்டுரை அனுப்பவேண்டிய கடைசித்திகதி 10.11.2004 புதன்கிழமை படைப்புக்களோ அன்றி விண்ணப்பங்களோ அனுப்புவதாயின் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் போட்டியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி**

செயலாளர்,
தனியார் போக்குவத்துச் சேவைச் சங்கங்களின் ஒன்றியம்,
50/1 பருத்தித்துறை வீதி,யாழ்ப்பாணம்

(சி.10587)

# கால்நடைகளின் நோய்க்கட்டுப்பாடும் பண்ணையாளர்கள் பங்களிப்பும்

வன்னிப்பகுதியில் கால்நடைவளர்ப்பு மிக முக்கியமான வாழ்வாதாரங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. இதற்கான வளங்கள் சிறப்பாகக் காணப்படுகின்றமையே இதற்கான காரணம்.

இத்துறையினை பொறுத்தவரை இதுவரை காலமும் போதிய சந்தை வாய்ப்பின்மை, மூலப் பொருட்கள் இன்மை எனப் பல் வேறுபட்ட இவர்கள் மத்தியில் பண்ணையாளர்கள் இலாபத்தையும், சிறந்த வருமானத்தையும் பெற முடியாத நிலையில் இருந்தனர். தற்போது பல தடைகளும் நீங்கி நாளாந்த வருமானத்தை இத்துறை கொடுத்து வருகிறது. எனினும் தொற்று நோய்களால் தற்போது கால்நடைகளுக்கு ஏற்படும் பெரும் பாதிப்புக்கள் பண்ணையாளர்களுக்கு பேரிழப்பை ஏற்படுத்துவதாகவுள்ளது.

இதில் வன்னிப்பகுதியை பொறுத்தவரை இவ்வருடம் கால்நோய், வாய்நோய் ஏற்பட்டு பின்பு பெரும் சிரமங்களின் மத்தியில் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது. எனினும் தற்போதும் ஒருசில இடங்களில் இதன் தாக்கம் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. அதேவேளை ஒருசில இடங்களில் கருங்காலி நோய் எனப்படுகின்ற நல்ல நிலையில் உள்ள இளங்கன்றுகளை தாக்குகின்ற நோய் ஆரம்பித்து உடன் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மற்றும் மழை காலத்தின் தொடக்க நிலையான இவ்வேளை தொண்டை அடைப்பான் என்ற நோயும் ஏற்பட சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றது. இதற்காக வருடாவருடம் ஏற்றப்படுகின்ற தடுபபூசி நடவடிக்கைகள் இம்முறையும் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாறு ஏற்படுகின்ற இந் நோய்களையும், இழப்புக்களையும் கால்நடை வைத்திய நிலையங்களின் தனித்த சேவையால் மட்டும் இல்லாதொழித்து விட முடியாது. உண்மையில் பண்ணையாளர்கள் தொடக்கம் சகல தரப்பினரும் இதற்கு ஒத்துழைப்பு நல்கவேண்டிய பெருந்தேவை காணப்படுகிறது. கால்நடைகளில் பல நோய்கள் ஏற்பட்டு வருகின்ற போதிலும் மாடுகள், எருமைகளைப் பொறுத்தவரை இலகுவில் தொற்றி பெருமளவு இழப்புக்களை ஏற்படுத்தக் கூடிய சில நோய்கள் மிகவும் முக்கியமானவை. இவை "விளம்பரப்படுத்தப்பட வேண்டிய நோய்கள்" எனத் திணைக்களத்தால் சிபார்சு செய்யப்பட்டவை வடக்குக்கிழக்கை பொறுத்தவரை முன்னடைப்பான், கருங்காலி நோய், கால்வாய் நோய் போன்றவை காலத்துக்குக் காலம் தோன்றும மிக முக்கிய நோய்களாகும். அந்திராக்ஸ், றின்டபெஸ்ற் என இப் பட்டியலில் உள்ளடக்கக் கூடிய சில மிக முக்கிய நோய்களும் உண்டு. எனினும் இந் நோய்கள இங்கு ஏற்படுவதில்லை. இவ்வாறான விளம்பரப்படுத்தப்பட வேண்டிய நோய்கள் ஒருபொதுவான ரீதியில் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரப் படாவிட்டால் பேரிழப்புக்களும் தவிர்க்க முடியாததாகி விடும். இந் நோய்க் கட்டுப்பாட்டில் முதலிடம் விகிப்பவர்கள் பண்ணையாளர்களே. தற்போது காணப்படுகின்ற ஆளணிப பற்றாக்குறையுடன் இரண்டோ, மூன்றோ பிரதேச செயலகங்களை உள்ளடக்கியதான கால்நடை வைத்தியப் பணிமனைக்கு இவ்வாறான நோய்கள் ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் ஏற்படும் போது ஆரம்பநிலையிலேயே அறியக் கொடுக்கவேண்டிய கடமைப்பாடு பண்ணையாளர்களுக்கே உண்டு. இவர்கள் வழமைக்கு மாறான இந் நோய்களின் அறிகுறிகள் தெரிகின்றபோது உடன் அக்கறை எடுக்கவேண்டும்.

ஒருநோய் அறிகுறியினை அவதானிக்கும் போது பண்ணையாளர்கள் மேற்கொள்ள வேண்டியவை

01.அறிகுறி உடைய விலங்குகளை உடன் ஏனையவற்றில் இருந்து பிரித்து வைத்தல்.

02.நோய் அறிகுறிகளை உடன் கால்நடை வைத்தியருக்கு அறியத் தருவதுடன் நோயை நிர்ணயிக்க அவரது உதவியை நாடுதல்.

03. நோய் கால்நடை வைத்தியரால் உறுதிப்படுத்தப்பட்டவுடன் அப்பகுதி கிராம சேவையாளர், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், கமக்கார அமைப்பு போன்றவற்றுக்கு அறியக் கொடுத்தல்.

04.இறந்த விலங்குகளை நீண்ட தூரம் எடுத்துச் செல்லாது மிக ஆழமான கிடங்குகளை இறந்த இடத்திற்கு அண்மையிலேயே வெட்டி உடல்களைப் புதைத்தல் (கிருமிபரவுவதைத்தடுக்க)

05.புதைக்கப்பட்ட குழிகளை மூடி சுண்ணாம்பு நீர் தெளித்தல் அல்லது மேலே குப்பை கூழங்களைப் போட்டு எரித்தல்.

06. நோய்வாய்ப்பட்ட மிருகங்கள் உள்ள இடத்தையும் துப்புரவாகப் பேணுவதுடன் கிருமி நீக்கும் திரவங்களை விசுறுதல் மற்றும் அவ் விலங்குகளின் கழிவுகளையும் சிறந்த முறையில அழித்தொழித்தல் (எரித்தல்/புதைத்தல்)

07.குறித்த இடத்தில் இருந்து ஏனைய இடங்களுக்கு விலங்குகள் நகராமல் பார்த்தல், பால், இறைச்சி கொண்டு செல்வதைத் தவிர்த்தல், மேய்ச்சல் தரைகளுக்கு இவ் விலங்குகள் செல்லாது தடுத்தல.

08.நோய்த் தடுப்பூசிகள் ஏற்றுவதைத் துரிதப்படுத்தல், இது பற்றித் தெரியாத பண்ணையாளர்களுக்கு அறிவூட்டுதல்/ தெரியப் படுத்துதல்

09.இது தொடர்பாக கால்நடை வைத்திய பணிமனை, பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் போன்றவற்றால் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளுக்குப் பூரண ஒத்துழைப்பு நல்குதல்.

இவ்வாறு உடன் கால்நடை வைத்தியருக்குத் தெரியப்படுத்துவதன் மூலம் நோயை சரியான முறையில் இனங்காணுவதுடன் தடுப்பூசி நடவடிக்கைகள் ஏனைய நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் போன்ற வற்றை இவற்றில் பண்ணையாளர்களை அக்கறை கொள்ளச்செய்தல் போன்ற நடவடிக்கைகளில் அவர்களும் ஈடுபட ஏதுவாக இருக்கும்.

உண்மையில் ஆரம்பத்தில் ஒருசில விலங்குகளுக்கே இந் நோய் ஏற்படுகின்ற போதிலும், அவற்றைப் பண்ணையாளர்கள் சரியான முறையில் அணுகாத காரணத்தால் அவை அதி தீவிர தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இவற்றை உடன் சரியாக அணுக பண்ணையாளர்களுக்கு இவற்றின் அறிகுறிகள் தெரிய வேண்டும். இதனடிப்படையில் சில அறிகுறிகள் கீழே தரப்படுகின்றன.

1.தொண்டை அடைப்பான்/ முன் அடைப்பான் நோய் அறிகுறிகள

* 24 மணி நேரத்திற்குள்ளான இறப்பு

* சகல வயதுப் பிரிவும் நோய்வாய்ப்படல்

* நோய்வாய்ப்பட்ட விலங்குகளில் மூச்சுத்திணறல், சளிவடிதல், முன்கால் நொண்டுதல், தாடை வீக்கம், குறிப்பிட்ட நிலையில் படுத்திருத்தல் போன்ற முக்கிய அறிகுறிகள் காணப்படும்.

* மழை தொடங்கமுன் உள்ள காலத்திலும் மழையின் ஆரம்ப காலத்திலும் குறிப்பாக இந்நோய் தோன்றி வேகமாகப் பரவும்

கருங்காலி நோய்/ பின் அடைப்பான்/ தொடை அலர்ச்சி அறிகுறிகள்

* 24 மணி நேரத்திற்குள்ளான இறப்பு.

* 4மாதம்-2வயதுக்குள்ளான நல்ல நிலையில் உள்ள கன்றுகளில் இந்நோய் குறிப்பாகத் தோன்றும்.

* நோய்வாய்ப்பட்ட விலங்குகளில் பின்கால் நொண்டுதல், கால்த்தொடைகளில் வீக்கம், கண்டல், நோ போன்றவை காணப்படுதல். தொட்டுணரும் போது வீங்கிய பகுதிகளுக்குள் வாயு இருப்பதற்கான அறிகுறிகள் தோன்றுதல், மூக்கு, வாய், குதவாசல்கள் ஊடாக இரத்தம் .வெளியேறுதல், சிலசமயம் இறந்த விலங்குகளிலேயே இவ்வறிகுறியினை காண முடியும். மற்றும் வயிறு வீங்குவதுடன் மூச்சுத்திணறுதல்.

* இறந்த விலங்குகளில் வீங்கிய பகுதிகளை வெட்டும்போது கண்டல் இரத்தம் வெளியேறுவதுடன் நுரை வெளியேறுதல்.

* மழைக்கு அண்டிய மற்றும் மழையின் ஆரம்பகாலங்களில் தோன்றி வேகமாகப் பரவுதல்.

கால்நோய், வாய்நோய் அறிகுறிகள்

1.சகல வயதுப் பிரிவும் தாக்கத்திற்குள்ளாதல்

2.கன்றுகளில் திடீர் இறப்பு.


3.நோய் வாய்ப்பட்ட விலங்குகளில் ஆரம்பத்தில் குளம்புகளுக்கிடையேயும் அண்டிய பகுதிகளிலும் கொப்புளங்கள், புண்கள் காணபபடுதல். வாய்,நாக்கு இதனுடன் தொடர்புடைய பகுதிகளில் கொப்புளங்கள், புண்கள் காணப்படல் சில வேளைகளில் புண்கள் அவதானிக்க முடியாவிடினும், தொடரான வீணீர் வடிதல் அவதானிக்க முடியும். இவ்வாறான வேளைகளில் வாயின் உட்புறம இக்கொப்புளங்களையும், புண்ணையும் அவதானிக்க முடியும். மற்றும் இவ் விலங்குகளும் நொண்டும், உணவு உண்ண மறுக்கும் பால்ப்பசுக்களில் திடீரென பால் குறைவு ஏற்படும். இவை தவிர ஏனைய சில வழமைக்கு மாறான அறிகுறிகள் தோன்றும் போதும் கவனமாக இருத்தல் அவசியம். இதன்மூலம் எந்தவொரு நோயையும் ஆரம்பத்திலேயே உடன் கட்டுப் பாட்டுக்குக் கொண்டு வர முடியும்.


இவற்றை உடன் அக்கறை எடுக்காதபோது குறிப்பிட்ட பண்ணையாளர் மட்டுமன்றி அயலிலுள்ளோர் அக்கிராம வாசிகள் இறுதியில் அப் பிரதேசவாசிகள் எனப் பல்வேறு தரத்தினரும் பாதிப்பிற்குள்ளாவர். அதாவது குறித்த பண்ணையாளரின் நோய்வாய்ப்பட்ட விலங்குகள் அங்கு உலாவித்திரிந்து மேய்ச்சல நிலங்களிலும் ஏனைய இடங்களிலும் கிருமிகளை வெளிப் படுத்தும். இதனைவிட இறந்த உடல்களை நாய்கள் போன்ற விலங்குகள் இழுத்துத் திரிவதன் மூலம் கிருமிகள் சகல இடங்களுக்கும் மிக வேகமாகப்பரவும். இதனால் இறுதியில் பால், இறைச்சி போன்றவை விற்பனைக்குத்தடை விதிக்கப்படும். இது பண்ணையாளரை மட்டுமன்றி நுகர்வோரையும் பாதிப்பதன் மூலம் வருவாய் சீகுலைவதுடன், போஷணைப் பதார்த்தங்கள் உள்ளெடுக்கப்படுவதுடன் தடைப்படும் விலங்குகளை வெளியிடங்களுக்கு எடுத்துச்செல்ல தடைகள் விதிக்கப்படும். திடீர் இறப்புக்கள் மூலம் பண்ணையாளர் இழப்புக்களைச் சந்திப்பதுடன் நோய்வாய்ப்பட்டு தப்பித்த விலங்குகளும் எதிர் காலத்திலும் உடல் நலம் குன்றியவையாகவே காணப் படும். இவ்வாறு பல்வேறு தாக்கங்களை கொடுக்கும் இந்நோய்களை அவதானிக்கும் ஒவ்வொரு பண்ணையாளருக்கும் உடனுரியவர் களுக்கு அறியக்கொடுப்பது இன்றியமையாததாகின்றது.

இவ்வாறான நோய்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு கிருமிகளால் ஏற்படுவதால் இவற்றுக்கான தடுப்பூசி நடவடிக்கைகளும், வேறுபடும். எனினும் அம்மை போன்ற நோய்கள் மனிதருக்கு ஏற்பட்டால் ஏனையோரில் இருந்து பிரித்து வைத்து பரவலைத்தடுப்பதைப் போலவும், போலியோ மருந்துகளை எவ்வாறு அக்கறையுடன் ஏற்றிக் கொள்கின்றோமோ, அதனைப் போலவும் எமது வாழ்வாதாரமாக விளங்கும் இவ் விலங்குகளையும் எண்ணிச்செயற்படவேண்டும். தடுப்பூசி ஏற்றுவதில் பின்நிற்கக் கூடாது.

வன்னிப்பகுதி மக்களாகிய எம்மை எவ்வாறான வறுமையிலும், செம்மையாக வாழவைத்து போஷணை மிக்க உறுதியான மனிதாகளை உருவாக்கி நின்ற இவ்விலங் குகளை கொடிய நோய்கள் தாக்காது பாதுகாப்புடன் தாக்கினாலும் உடன்கட்டுபபாட்டிற்குள் கொண்டு வருவது பண்ணையாளர்களின் பங்களிப்பிலேயேயுள்ளது என்பது இங்கு யாரும் மறுக்க முடியாத பெரும் உண்மையாகும்.

இக்கட்டுப்பாட்டு நிகழ்வுகளுக்கான வழிமுறைகள் தனித்த பண்ணையாளரால் உடன் முன்னெடுக்கப்பட வேண்டும். இருந்த போதிலும் இதனை அவர் செய்கின்ற அதேவேளை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கும் அறியத்தருவது சிறந்தது. இதன்மூலம் தடுப்பூசி நடவடிக்கை தீவிரமடைவதுடன் கட்டுப்பாடு தொடர்பான பயிற்சி வகுப்புக்களை ஒழுங்குபடுத்துதல், சந்தை நிலைப்பாட்டை சிறந்த முறையில் அணுகுதல், இறந்த விலங்குகளைச் சிறந்த முறையில் அழித்தொழிக்க நடவடிக்கை எடுத்தல், முன்னெடுத்துச் செல்ல ஏதுவாக இருக்கும். மற்றும் கிராம சேவையாளருக்கு அறியத்தருவதன் மூலம் கிராமத்தில் மிக்க அக்கறை கொண்டவரான அவர் அதனை உடன் பிரதேச செயலகத்திற்கு அறியக்கொடுப்பதன் மூலம் அத்தகவல் மாவட்டச் செயலகத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதன் மூலம் விலங்குகளின் நடமாட்டத்தைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரவும், மாவட்டத்திற்கு மாவட்டம் அவை செல்லாது தடுக்கவும் உதவுவார். மற்றும் கிராமத்தில் இறந்த விலங்குகள் சரியான முறையில் அழித்தொழிக்கப்படாத பட்சத்தில் குறித்த பண்ணையாளருக்கான அறிவுறுத்தலை வழங்கவும், சிறந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உறுதுணையாக இருப்பார். மற்றும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திற்கும் அறியத் தருவதன் மூலம இந்நோய்க்கட்டுப்பாடு மிக வேகமாக நடைபெற எல்லாவழிகளிலும் ஒத்துழைப்புக் கிடைக்கும்.






கால்வாய் நோயால் பாதிப்புற்ற பசுவும், கன்றும் மற்றும் இறந்த கன்றும்

**கால்நடை வைத்திய அதிகாரி**
**துணுக்காய்**

# பைசலாபாத் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி


# பாகிஸ்தான் வெற்றிபெற 418 ஓட்ட இலக்கு



சிறிலங்கா அணிக்கும் பாகிஸ்தான் அணிக்கும் இடையில் நடைபெற்றுவரும் பைசலாபாத் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் வெற்றிபெற 418 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை சிறிலங்கா அணி நிர்ணயித்துள்ளது.


சனத் ஜெயசூரியவின் அபாரமான இரட்டைச்சத ஓட்ட எண்ணிக்கை பாகிஸ்தானுக்கு மேற்படி கடினமான வெற்றி இலக்கை நிர்ணயிக்கக் காரணமானது.

போட்டியின் நான்காம் நாளான நேற்று வெற்றி இலக்கை நோக்கிஆடும் பாகிஸ்தான் நான்கு முக்கிய விக்கெட்டுக்களை இழந்த நிலையில் வெற்றிபெறுவதற்கு இறுதி நாளான இன்று 304 ஓட்டங்களைப் பெறவேண்டியுள்ளது. ஆறு விக்கெட்டுக்களே கைவசம் உள்ள நிலையில்



வீழ்த்தப்பட்ட நான்கு விக்கெட்டுக்களையும் டில்காரபெர்னாண்டோ கைப்பற்றினார்.

சிறிலங்கா துடுப்பாட்டத்தில் சனத் ஜெயசூரிய 253 ஓட்டங்களைப் பெற்றார். இதில் 33 நான்கு ஓட்டங்களும், 4 ஆறு ஓட்டங்களும் அடங்கும். இவ் ஓட்ட எண்ணிக்கை பாகிஸ்தான் சிறிலங்கா அணிகளுக்கிடையிலான தொடர்களில் பெறப்பட்ட அதிகூடிய தனிப்பட்ட ஓட்டமாகவும் அமைந்தது. இதனைவிட ஒன்பதாவது விக்கெட் இணைப்பாட்டமாக ஜெயசூரிய பெர்னாண்டோவுடன் இணைந்து 101 ஓட்டங்களைப் பெற்றார். இதில் பெர்னாண்டோ ஒரு ஓட்டத்தை மாத்திரம் பெற்றார். இதேவேளை சமரவீர 24 ஓட்டங்களைப் பெற்றார்.ஏனைய வீரர்கள் இரட்டை ஓட்டங்களைக் கூடப் பெறாது ஆட்டமிழந்தனர்.



பந்துவீச்சில் அக்தர் 3 விக்கெட்டுக்களையும், கனேயா, 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

வெற்றி இலக்கை நோக்கி ஆடும் பாகிஸ்தான் 4 விக்கெட்டை இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் இம்ரான் பர்ஹத் 53 ஓட்டங்களையும், யூசுப்யுகானா ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

## சூப்பர் சிக்ஸ் கிரிக்கெட் பாக். அணி அறிவிப்பு

சூப்பர் சிக்ஸ் கிரிக்கெட் தொடருக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டது. அணியின் தலைவராக அதிரடி வீரர் சயீத் அப்ரிடி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.


சூப்பர் சிக்ஸ் கிரிக்கெட் தொடர்வரும் நவம்பர் 6இல் ஹொங்கொங்கில் துவங்குகிறது. இம்முறை எட்டு அணிகள் பங்கேற்கின்றன. இவை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிகளும், மற்றொரு பிரிவில் இங்கிலாந்து, சிறிலங்கா கென்யா மற்றும் ஹொங்கொங் அணிகளும் பங்கேற்கின்றன.

இதற்கான பாகிஸ்தான் அணி நேற்று அறிவிக்கப்பட்டது. அணியின் தலைவராக அப்ரிடி தேர்வு செய்யப்பட்டுள்ளார். சயீத் அப்ரிடி, யாசிர் அராபத், கம்ரன் அக் மால், அமிர் பஷிர், ரியாஸ் அப்ரிதி, நவேத் லதீப் மற்றும் இம்ரான் நசிர்.




## காதல் கசந்தது திருமணம் நின்றது பிரிந்தனர் கிளைஸ்டர்ஸ்- ஹெவிட்





டென்னிஸ் அரங்கில் காதல் பறவைகளாக உலா வந்த கிளைஸ்டர்ஸ், ஹெவிட் சொந்தக் காரணங்களுக்காக பிரிகின்றனர். திருமணத்திற்கு இன்னும் நான்கு மாதங்களே இருக்கும் நிலையில், இவர்கள் பிரிந்தது ரசிகர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பெல்ஜியத்தின் நட்சத்திர வீராங்கனையான கிளைஸ்டர்ஸ் 2001இல் நடந்த அவுஸ்திரேலியன் ஓபன் போட்டியில் பங்கேற்றார். அப்போது அவரது தங்கை எல்கி அவுஸ்திரேலியாவின் முன்னணி வீரரான ஹெவிட்டிடம் "ஆட்டோகிராப்" வாங்கித் தரும்படி வற்புறுத் தினார். உடனே ஹெவிட்டை சந்தித்த கிளைஸ்டர்ஸ், அந்த வினாடியில் மனதையும் பறிகொடுத்தார்.

இந்தச் சூழலில் நேற்று முன்தினம் கிளைஸ்டர்ஸ் தனது வெப்சைட்டில் ஹெவிட்டைப் பிரியும் தகவலை வெளியிட்டு அதிர்ச்சி தந்துள்ளார். ஹெவிட்டும் நானும் சொந்தக் காரணங்களுக்காகப் பிரிகிறோம். இதனால் திருமணம் நடக்க வாய்ப்பு இல்லை.

பிரிவுக்கான காரணத்தை நாங்கள் இருவருமே 'மீடியாவுக்கு'த் தெரிவிக்க விரும்பவில்லை என்று கிளைஸ்டர்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

21 வயதான கிளைஸ்டர்ஸ் 21 சம்பியன் பட்டங்களை வென்றுள்ளார். 2003 இல் முதல் நிலை வீராங்கனை என்ற அந்தஸ்த்துக்கு உயர்ந்த இவருக்கு கையில் ஏற்பட்ட காயம் வினையாக அமைந்தது. இதனால் இவர் கடந்த மே மாதத்தில் இருந்த போட்டிகள் எதிலும் பங்கேற்க முடியவில்லை. 23வயதான ஹெவிட் யு.எஸ், ஓபன் (2001), விம்பிள்டன் (2002) உட்பட மொத்தம் 23 முறை சம்பியன் பட்டங்களை சம்பியன்களாக விளங்கும் இவர்கள் வாழ்வில் ஒன்று சேர முடியாமல் போனது வருத்தம் அளிக்கும் விஷயம்தான்.

## பட்டேலுக்கு ஆதரவு

ஒரு வீரர் தடுமாறும் போது ஊக்கமளித்து அவரைத் தூக்கி விடவேண்டும் என விக்கெட் கீப்பர் பார்த்தீவ் பட்டேலுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார் சச்சின் டெண்டுல்கர்.

அவுஸ் திரேலியாவுக்கு எதிரான பெங்களூர் மற்றும் சென்னை டெஸ்ட் போட்டிகளில் பட்டேல் சரிவர சோபிக்காததையடுத்து தேர்வுக்குழுவின் கவனத்தை ஈர்த்தார்.

அத்துடன் அவர் சோபிப்பதற்கு மீண்டும் ஒரு வாய்ப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. இல்லையேல் மும்பை டெஸ்டில் அவர் இடம்பெறுவது சந்தேகம் என சென்னையில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியச் செயலாளர் எஸ்.கே.நாயர் தெரிவித்தார்

இந்நிலையில் இ.எஸ்.பி.என் டிவிக்குஅளித்துள்ள பேட்டியில் சச்சின் டெண்டுல்கர் கூறியுள்ளதாவது;

பட்டேல் மாதிரியான வீரர்கள் தடுமாறும்போது அவதூறு பேசக் கூடாது. அவரை முன்னேற்றுவதற்கு என்ன வழியோ அதைக் கூறவேண்டும் என்றார்.


## சர்வதேச டென்னிஸ் காலிறுதியில் வீனஸ்



சர்வதேச டென்னிஸ் தொடரில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் காலிறுதிக்குத் தகுதிபெற்றார்.

சுவிட்சர்லாந்தில் உள்ள சூரிச் நகரில் முன்னணி டென்னிஸ் வீராங்கனைகள் பங்கேற்கும் சர்வதேச டென்னிஸ் தொடர் நடக்கிறது. காலிறுதிக்கு முந்தைய சுற்றுப போட்டி நேற்று முன்தினம் நடந்தது. இதில் வீனஸ் வில்லியம்ஸ், உலகின் 155 ஆம் நிலை வீராங்கனையான செர்பியாவின் அன்ன இவானோவிக்கைச் சந்தித்தார். சர்வதேச அந்தஸ்து பெற்ற தொடரில் இவானோவிக் பங்கேற்பது இதுவே நான்காவது முறை ஆனாலும் அனுபவம் குறைந்த இவர் அபாரமாக விளையாடினார். இறுதியில் வீனஸ் 7-6 (13/11) 7-6(8/6) என்ற செட்களில் மிகவும் போராடி வெற்றி பெற்றார்.

## நாக்பூர் டெஸ்ட் போட்டி டெண்டுல்கர் விளையாடுவார்




இந்திய- அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் நாக்பூரில் நடைபெறவுள்ள மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் விளையாடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் உத்தியோக பூர்வ அறிவிப்பை இந்திய கிரிக்கெட் சபை சார்பில் எஸ்.கே நாயர் நேற்று வெளியிட்டார்.

இது குறித்துத் தெரிவித்த சச்சின் நாக்பூர் டெஸ்ட் போட்டியில் விளையாடவுள்ளது மகிழ்ச்சி அளிப்பதாய் உள்ளது எனத் தெரிவித்தார். இதேவேளை இரு அணி வீரர்களும் நேற்று நாக்பூர் சென்று பயிற்சிகளில் ஈடுபட்டனர்.

## சிம்பாப்வேக்கான சுற்றுலாவை இங்கலாந்து அணி மேற்கொள்ளும்



அடுத்த மாதம் சிம்பாப்வேக்கான சுற்றுலவை மேற்கொள்ள இருக்கும் இங்கிலாந்து அணி சிம்பாவேயில் பாதுகாப்புகள் சிறப்பாக இருக்கின்றதா? தங்களுடைய வீரர்கள்அங்குசென்று பாதுகாப்பாக திரும்பி வர முடியுமா? என்ற ஆராச்சியில் ஈடுபட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் பிராந்திய கிரிக்கெட் சபையினுடைய பிரதம நிறைவேற்று அதிகாரிகள் சிப்பாப்வேக்கான சுற்றுலாவை மேற்கொண்டிருந்தனர் இதன் அடிப்படையில் அங்கு அவர்கள் பொலிசார், எதிர்க் கட்சியினர் இப்பொழுது இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்ததாகவும் இதிலிருந்து அங்கு விளையாடுவதற்கான ஏதுநிலை தென்படுவதாகவும் பாதுகாப்பு உறுதிப் படுத்தப்படக்கூடிய சூழ்நிலை இருப்பதாகவும் அந்த குழுவில் சென்ற பிரதம நிறைவேற்று அதிகாரி ாச்சர் பெவன் தெரிவித்துள்ளார். எனவே இந்த சுற்றுலா இடம் பெறும என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

## சந்தேகத்துக்கு இடமான பந்து வீச்சு முறைமை

## ஆராயும் மாநாடு நாளை துபாயில் ஆரம்பம்

சந்தேகத்திற்கு இடமான பந்து வீச்சு முறைமை குறித்து ஆராய்வதற்காக சர்வதேச கிரிகெட் சம்மேளனத்தின் குழுவினர். எதிர்வரும் 25ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதிவரை துபாயில் கூடி ஆராயவுள்ளனர்.

இந்தக் குழுவில் சிறிலங்காவின் முன்னாள் கிரிட்கெட் வீரர் அரவிந்த டீ.சில்வா மற்றும் இங்கிலாந்தின் ரொனிலேவிஸ் ஆகியோரோடு மேற்இந்தியத்தீவின் மைக்கல்கோல்டிங்அவுஸ்திரேலியாவின் டிம்பி மற்றும் சர்வதேச கிரிட்கெட் சம்மேளனத்தின் முகாமையாளர் டேவிட் ரிச்ட்சன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இறுதி அறிக்கை எதிர்வரும் நவம்பர் மதம் குழு கூடுகின்றபோது சமர்ப்பிப்பார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அது மத்திரமல்லாது நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் முரளிதரனின் "தூஸ்ரா" பந்து வீச்சு முறையில் பந்துவீசுகின்றார் என்ற அடிப்படையில் அவர் மீது சந்தேகப்பார்வை ஈடுபடுத்தப்பட்டது. இருந்தாலும் இறுதி முடிவு இதுவரை எடுக்கப்படவில்லை என்றதன் அடிப்படையிலே இந்தக் கூட்டம் இடம்பெற இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## உலக கோல்ப் சம்பியன் போட்டி 4 பேர் கொண்ட இந்திய அணி பங்கேற்பு

பியூர்டோ ரிகோவில் வரும்28ஆம் திகதி முதல் நடைபெறும் உலக அமெச்சூர் கோல்ப் குழு சம்பியன் போட்டியில் 4பேர் கொண்ட இந்திய அணி பங்கேற்கிறது.

விக்ரந்த் சொப்ரா, அமர்பீர்சிங் சேஹல், ஜஸ்கிராத் டல்லத், ஜெய்தீப் பத்வர்த்தன் ஆகியோர் இந்திய அணியில் இடம்பெற்றுள்ளனர். கப்டனாக ஜெய்தீப் பத்வர்தன் உள்ளார். இவர் பெயருக்குத் ...ன் கப்டன் விளையாடமாட்டார்.

போட்டியில் பங்கேற்கும் நாடுகள் 18 குழிகள் ...ண்ட களத்தில் தலா 4 சுற்றுகள் விளையாட ...ண்டும். இதற்கு முன்னர் நடைபெற்ற 23 உலக ...பியன் போட்டியிலும் இந்தியா பங்கேற்றுள்ளது. ஆனால் சிலியில் 1998இல் நடைபெற்ற போட்டியில் 15ஆவது இடத்தைப் பிடித்ததே இந்தியா பெற்ற அதிகபட்சமான வெற்றி.


## ஸ்கந்தா வி.கழகம் நடாத்தும் மாபெரும் கால்பந்து போட்டி

ஸ்கந்தபுரம் ஸ்கந்தா விளையாட்டுக்கழகம் நடாத்தும் கால் பந்து சுற்றுப் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று ஏழு போட்டிகள் நடைபெற்றன.

இப்போட்டியில் திருநகர் பீ அணி, உழவர் ஒன்றிய ஏ அணி, ஜொலிபோய்ஸ்ஏ அணி, முழங்காவில் விநாயகர் ஏ அணி, புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா ஏ அணி, உருத்திரபுரம் நீலம் அணி என்பன வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறின.

ஜொனி அணி சமூகமளிக்காததால் லக்கிஸ்ரார் ஏ அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இன்று 15 -21 வரையான போட்டிகள் நடைபெறவுள்ளன. அரையிறுதி, இறுதிப் போட்டிகள் நாளை நடைபெறவுள்ளது.



## சிந்தனைக்கு

சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப்போவதில்லை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 24-10-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## அரசின் ஆசீர்வாதத்துடன்

1995 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் இளைஞர் ஒருவர் காணாமற் போனமைக்கு இராணுவத்தினரே காரணம் எனவும், 2000ஆம் ஆண்டில் வவுனியா நெளுக்குளத்தில் இளைஞர் ஒருவர் காணாமற் போனமைக்கு இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். குழுவினரே காரணம் எனவும் வவுனியா மாவட்ட நீதவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மேல்முறையீட்டு நிதிமன்றுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

சிறிலங்காஅரச படையினாலும், அவர்களின் துணைப் படையாகச் செயற்பட்ட தமிழ்க் குழுக்களாலும், கைது செய்யப்பட்டுக் காணாமற் போனோரின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கிலாகும். இதில் பெரும்பான்மையினரின் கைது, காணாமற் போதல் தொடர்பானதுமான சம்பவங்களுக்கு ஆதாரங்கள் எவையுமே இல்லை.

ஏனெனில் கைதுகள் குற்றச்சாட்டின் அடிப்படையிலானதோ அன்றிச் சட்டத்தின் அடிப்படையிலானதாகவோ இருக்கவில்லை. அரசு உருவாக்கியிருந்த அராஜகச் சட்டங்களைக் கைகளில் எடுத்துக்கொண்ட படையினரும், அவர்களுடன் இணைந்து செயற்பட்டவர்களும் இக்கைதுகளையும் படுகொலைகளையும் எத்தகைய கட்டுப்பாடும் இன்றிச் செய்தனர்.

அவர்கள் யாருக்கும் விளக்கமளிக்கவோ, காரணம் கூறவேண்டிய தேவையோ இருக்கவில்லை. இவர்களின் கைதுகளுக்குச் சாட்சியங்களோ, அத்தாட்சிகளோ எவையுமே இருக்கவில்லை. இவற்றை அவர்கள் விட்டுவைக்கவுமில்லை. கூட்டமாகக் கைது செய்யப்பட்டவர்கள் திரும்பிவரவுமில்லை. கைது செய்யப்பட்ட போதோ சிறையிலோ அன்றி சித்திரவதையின்போதோ கண்டுகொண்டவர்களும் திரும்பிவரவில்லை. அனைவருமே காணாமற் போயினர். இதனால் கைதின் போதோ, காவலின் போதோ கண் கண்ட சாட்சிகள் கிடைக்கப்பெறவில்லை. கிடைப்பினும் ஆதராம் கிடைக்கப்பெறவில்லை.

இந்நிலையில் காணாமற்போனவர்கள், காணாமற் போனவர்களேயாயினர். இப்படுகொலைகளுக்குப் பொறுப்பானவர்கள் எவருமே பொறுப்பெதுவும் ஏற்கவேண்டியதான சூழ்நிலை உருவாகவில்லை. இவற்றில் இருந்து ஒருசில விதிவிலக்காக அமைந்த வையே தற்பொழுது வவுனியா நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்ட இரு வழக்குகள் ஆகும்.

இத்தீர்ப்புக்கள் ஓரிரண்டே. இலங்கையில் கைதாகிக் காணாமற் போனவர்களுக்கு யார் பொறுப்பாளிகள் என்பதனை வெளிப்படுத்தப் போதுமானவையாகும். ஆனால், இவ் ஓரிரண்டு தீர்ப்புக்களுக்குக் கூட இதற்குரியவர்கள் பொறுப்பேற்பதில்லை என்பதே இங்கு வருந்தத்தக்கதும், சுட்டிக்காட்டத்தக்கதுமான விடயமாகும்.

அதாவது இவ்விருவரும் காணாமற் போனமைக்கு சிறிலங்கா இராணுவமே பொறுப்பேற்றல் வேண்டும்.ஆனால், சிறிலங்கா ஆயுதப்படைத் தரப்பு எவ்வகையிலும் இதற்கான பொறுப்பை ஏற்பதில்லை. ஏனெனில் சிறிலங்கா ஆயுதப் படைத் தரப்பினர் இவற்றிற்கான பொறுப்பை ஏற்கத்தக்கவகையில் சிறிலங்கா ஆயுதப்படைத்தலைமையோ அன்றி அரசாங்கமோ நடந்துகொண்டதாக இல்லை.

இதற்கும் காரணம் இல்லாமல் இல்லை. அதாவது இக்கைதுகளும் காணாமற்போவதும் அரசாங்கத்தின் நோக்கத்துடனும், ஆசீர்வாதத்துடனும், ஆயுதப்படைத் தலைமையின் பணிப்பின் பெயரிலுமே நடை பெறுகின்றன. ஒருசில கைதுகள், காணாமற் போதல் என்பவை மட்டுமே படையினரின் விருப்பு,வெறுப்பு அடிப்படையில் நடைபெறுகின்றன.

இந்நிலையில் ஆயுதப்படைத்தரப்பு மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படும்போது அக்குற்றச் சாட்டில் இருந்தும் அதனை விடுப்பதற்காகவே சிறிலங்கா அரசு முற்பட்டுள்ளது. சுருக்கமாகக் கூறுவதானால், சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பை நீதிமன்ற நடவடிக்கைகளில் இருந்து பாதுகாப்பதற்கான நடவடிக்கையில் அரசாங்கம் அக்கறை செலுத்தி வந்துள்ளது என்பதே கடந்தகால வரலாறாகும்.

ஆகையினால், ஆயுதப்படையினருக்கு எதிரானதாக ஓரிரு தீர்ப்புக்கள் வழங்கப்பட்டாலும் கூட அதற்குப் பொறுப்பேற்க படைத்தரப்போ அன்றி அரசாங்கமோ தயாராக இல்லாத நிலையில் இத்தீர்ப்புக்களினால் நீதி நிலைநிறுத்தப்டுவதாக அர்த்தம் கொள்ளமுடியாது.. அதாவது குற்றவாளிகள் தண்டிக்கப்படாது தீர்ப்புடன் மட்டும் நின்றுவிடுதல் நீதி நிலைநிறுத்தப்படுவதாக அர்த்தம் ஆகாது.

ஆயினும் இத்தீர்ப்புக்களினால், குற்றவாளிகள் தண்டிக்கப்படாது போனாலும்,- குற்றவாளிகளும், அதற்குப் பொறுப்பானவர்களும் அம்பலப்படுத்தப்படுவது வரவேற்கத் தக்கதே. அதாவது குற்றவாளிகள் அடையாளம் காட்டப்படுவது தமிழருக்கு அநீதி இழைக்கப்படுகின்றது என்பதை நிருபணம் செய்வதற்கு உதவத்தக்கதே.

# பிரதியமைச்சர்கள் பலருக்கு உரிய பொறுப்புக்கள் வழுங்கவில்லை

### பிரதியமைச்சர்கள் குழு குற்றச்சாட்டு

பிரதியமைச்சர்கள் பலருக்கு இதுவரை உரியபொறுப்புகள் வழங்கப்படவில்லையென பிரதியமைச்சுக்களின் குழு குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக சனாதிபதியிடம் கலந்துரையாடத் தீர்மானித்துள்ளதாக அதன் ஏற்பாட்டாளர் டிலான் பொரேரா தெரிவித்துள்ளார்.

சிலஅமைச்சர்கள் பிரதி அமைச்சர்களுக்கு அதிகாரங்கள் வழங்காததால் கூடியசேவைகளைச் செய்ய முடியாதுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். பிரதியமைச்சர்கள் தமது அமைச்சுக்களின் வேலை செய்யும் போது அதிகாரங்களை அவர்களிடம்பெற்றுக்கொள்வது தொடர்பாக பிரச்சினை உள்ளதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வரவு- செலவுத் திட்ட விவாதத்திற்கு முன்னாள் பிரதியமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் குழுவினால் நிதியமைச்சரவையும் கற்பிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

# மேலும் 3 மு.கா. பா.உ.கள் ஆளும் கட்சிக்குத் தாவலாம்

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசிற்குள் மாற்றுக் குழுவினராகச் செயற்படும் 3 பாராளுமன்ற உறுப்பினர்கள் விரைவில் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ள விருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர்களான ரிசாத் பதியதீன் (வன்னி மாவட்டம்),அமீர்அலி (மட்டக்களப்பு மாவட்டம்) நஜீப் அப்துல் மஜீத் (திருமலை மாவட்டம்) ஆகியோரே ஆளும் கட்சிக்குத்தாவ இருப்பதாகத் தெரியவருகிறது. ஏற்கனவே தமதுகட்சி தலைமையின் மீது அதிருப்தியடைந்துள்ள இந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சியில் இணைந்து கொண்டாலும் தமது பதவியைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தமது கட்சியின் மாற்றுக் குழுவாக செயற்படுவார்கள். இது தொடர்பாக அமைச்சர் மங்கள சமரவீரவுடன் இறுதிக்கட்டப் பேச்சுவார்த்தையை நடத்தி யிருக்கின்றார்கள். இவர்கள் இணையும் பட்சத்தில் அவர்களின் பதவி பாதுகாக்கப்படும் என்ற உத்தரவாதமும் வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப் பினர் ஹசைன் பைலா ஆளும் கட்சிக்குத் தாவி பிரதி அமைச்சரா னார். இவர்களும் ஆளும் கட்சி யுடன் இணையும் பட்சத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக் கை 8 இலிருந்து 5ஆகக் குறையும்.

# தேசிய ரீதியான அமைச்சுப் பதவியை இ.தொ.கா. சந்திரிகாவிடம் கோரல்

ஆளும் கட்சியில் அண்மையில் இணைந்து கொண்ட இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸ் அமைச்சரவையில் தேசியரீதியிலான அமைச்சுப் பதவி யொன்றைக்கோரி அரசாங்கத் திடம் அழுத்தம் கொடுத்து வருகின்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்ஆறுமுகம் தொண்டமான் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். சனாதிப்தி மாளிகையில் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்தையில் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி தொடர்பான அமைச்சை அவர் கோரியிருப்பதாகத் தெரியவருகின்றது. தற்போது அவரது கட்சி பாராளுமனற் உறுப்பினர் முத்து சிவலிங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள தோட்ட வீடமைப்பு உட்கட்டமைப்பு அமைச்சானது மலையகத்துடன் மட்டுப்படுத்தபட்டுள்ளதால்தான் தேசிய ரீதியிலான அமைச்சை அவர் கோருகின்றார். சனாதிபதியுடன் இடம் பெற்ற சந்திப்பின் போது சபாநாயகர் வி.ஜே.மு. லொக்குபண்டார (ஐ.தே.க) எதிராக ஆளும் கட்சி கொண்டு வரவிருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குத் தனது கட்சி ஆதரவு அளிக்க மாட்டாது என்றும் தெரிவித்துள்ளார்.

# இலங்கை சமாதான முயற்சிகளிலிருந்து நோர்வேயை வெளியேற்றக் கோரிப் பிரேரணை

இலங்கையின் சமாதான முயற்சிகளிலிருந்து நோர்வே வெளியேற வேண்டும் எனக் கோரும் தனிநபர் பிரேரணையொன்றை ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் வண. அத்துரலியே ரத்தனதேரர் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் முன்வைதத்துள்ளார். இந்தப் பிரேரணை தொடர்பான விவாதம் நேற்று முன்தினம் நடைபெறவிருந்த போதிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்த ஆட்சேபனை காரணமாக விவாதம் நடைபெறவில்லை. இந்த பிரேரணையின் பிரதி தமிழ்மொழி பெயர்ப்பில் தரப்படவில்லை என தமிழ்த்தேசிய முன்னணியைச் சேர்ந்த சம்பந்தன் தெரிவித்த ஆட்சேபனையைச் சபா நாயகர் வி.ஜே.மு.லொக்கு பண்டார ஏற்றுக் கொண்டு தமிழ் மொழிபெயர்ப்புப் பிரதியைத்தாமதமின்றி வழங்குமாறு சபைச்செயலாளருக்கு உத்தரவிட்டுவிவாதத்தை எதிர்வரும்19ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

# முன்னாள் உள்துறை அமைச்சரின் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு விளக்கமறியல்

துப்பாக்கிகள் சகிதம் கைது செய்யப்பட்ட முன்னாள் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஐந்து பேரும் எதிர்வரும் 05ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சுமார் 20 இலட்சம் ரூபா பெறுமதியான தொல்பொருட்களை நுதேகொடையிலுள்ள வர்த்தகர் ஒருவருக்கு விற்க முயன்ற வேளை நேற்று முன்தினம் இவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் நேற்றுக் கொழும்பு புதுக்கடை நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.இவர்களிடமிருந்து இரண்டுதுப்பாக்கிகளும்,துப்பாக்கிரவைகளும் மேலும் பல ஆயுங்களும், கையடக்கத் தொலைபேசிகள் உப்பப் பொலிஸ் சேவை அடையாள அட்டையும், 52-2339 இலக்கமுடைய வான் ஒன்றையும் பொலிசார் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சந்தேகத்துக்கிடமாக நடமாடினாராம் அனுராதபுரத்தில் தமிழர் ஒருவர் கைது

சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாக குற்றம் சாட்டி தமிழ்ப் பொதுமகன் ஒருவரை அனுராதபுரத்தில் சிறிலங்காப் பொலிசார் கைது செய்துள்ளனர்.நேற்று முன்தினம் அதிகாலை 5.30 மணியளவில் அனுராதபுரம் நகர்ப்பகுதியில் சுற்றித்திரிந்த இந்த நபர் தகுந்த அடையாளங்களை காண்பிக்காததனாலும் அந்த நேரத்தில் அங்கு நின்றமைக்கான உரிய விளக்கத்தை வழங்காமையினாலுமே அவரைக் கைது செய்ததாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.தெனியாய என்ற இடத்தைச் சேர்ந்த கருப்பையா சுப்பிரமணியம் என்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர் என்றும், அனுராதபுரம் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட இவர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் ஆங்கில நாளிதழ் செய்தியொன்று கூறுகின்றது.

# ஜப்பானில் நில நடுக்கத்தினால் பலர் பலி; கட்டடங்கள் சேதம்; அதிவேகரயில் தடம்புரண்டது

ஜப்பானில் மத்திய பகுதியில் தொடர்ச்சியாக நிலநடுக்கங்கள் நேற்று ஏற்பட்டதில் பலர் உயிரிழந் துள்ளதுடன் நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந் துள்ளனர். இந் நிலநடுக்கம் றிக்டர் அளவு கோலில் 6.8 எனப் பதியப் பட்டுள்ளது. இதனால் பெரும் சேதங்கள் ஏற் பட்டுள்ளன. வீதியில் பெரும் பிள வுகள் ஏற்பட்டு கட்டங்கள் இடிந்து வீழ்ந்துள்ளன. பல வீடுகளுக்கு மினசாரம் தடைப்பட்டது. அத்துடன் அதிவேக ரயில் ஒன்றும் நில நடுக்கம் காரணமாக தடம்புரண்டது. தலைநகர் டோக்கியோ விலும் நிலநடுக்கம்வலுவாக இருந்த தெனவும் கட்டங்கள் பல நிமிடங் களுக்கு ஆடின என த்தெரியவருகிறது

# கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய இரு பொலிசார் உட்பட ஐவர் கைது

கொழும்பிலும் கண்டியிலும் இடம்பெற்ற பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் இரண்டு பொலிசார் உட்பட 5 பேரை கறு வாக்காட்டுப் பொலிசார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளார்கள்.

இவர்களில் ஒருவர் பொலிஸ் சார்ஜன்ட் மற்றுமொருவர் பொலிஸ் கான்ஸ்டபிள் எனத் தெரி விக்கப்படுகின்றது. இவர்கள் இரு வரும் அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றுபவர்கள் என்று விசாரணையின் போது தெரிய வந்துள்ளது. புதையலில் கிடைத்த பொருட்களை விற்பனை செய்ய வந்ததாகக் கூறி வீடுகளுக்குள் பிரவேசிக்கும், இக்குழுவினர் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்துள்ளார்கள். இவர்கள் கொழும்பு பிரதம நீதிபதி முன்னலையில் ஆஜர் செய்யப் பட்டுத் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

## முச்சக்கர வண்டிச் சாரதி கொலை நான்கு பேர் காலியில் கைது

வவுனியாவில் கடந்த வாரம் ஓட்டோ சாரதி மொகமது அமீர் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக காலி இரத்தோட்டையில் 4 பேர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் ஒருவர் தேடப்பட்டு வருகின்றார். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் 4 பேரும் நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட போது நீதிபதி எம்.இளஞ்செழியன் எதிர் வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

## பெண் சிப்பாய் தற்கொலை

திருகோணமலை மங்கிபிரிட்ஜ் இராணுவ முகாமில் பணியாற்றும் பெண்இராணுவச் சிப்பாய் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்துள்ளார்.

கடந்த புதன்கிழமை இரவு இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் தற்கொலை செய்து கொண்டவர் ஊவாபரணகமவைச் சேர்ந்த ஸ்ரீயானி பத்மலதா (வயது 26 ) என அடையாளம் காணப்பட்டுள் ளார். கடமை நேரத்தில் தன் வசமிருந்த ரி 56ரக துப்பாக்கியைப் பயன்படுத்தியே இவர் தற்கொலை செய்துள்ளார்.

# தரம்–5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்குப் பாராட்டு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி சிவநகர் அ.த.க பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் கற்பித்த ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் மனோகரன் தலைமையில் நடை பெற்றது.

மேற்படி நிகழ்வானது நேற்று முன்தினம் நடைபெற்றது. இதற்கு பிரதம விருந்தினராகக் கரைச்சிக் கோட்டக்கல்வி பணிப்பாளர் திரு மதி இ.அரியரத்தினம் அவர்களும், மற்றும் விருந்தினர்களாக கிளி நொச்சி, தபாலதிபர் க.பேரம்பலம் அவர்களும் கிராம அலுவலர் த.அருந்தமிழ்ச்செல்வனும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இப் பாராட்டு விழாவில் அப் பாடசாலை மாணவர்களான ஆறு முகம்- நகுலதீபன், (138 புள்ளி கள்), பேரம்பலம்-மேனுசா (128 புள்ளிகள்), ஜெயராசா-தர்சிகன் (127 புள்ளிகள்), நீக்கிளாஸ்-ஜெனகா (125 புள்ளிகள்) ஆகிய நான்கு மாணவர்களையும், தரம் 05இல் கற்பித்த ஆசிரியர்களான திருமதிசிறிகிருஷ்ணராசா, செல்வி ச.வசந்தரதி ஆகியோருமே கௌர விக்கப்பட்டனர். இவர்களுக்குரிய பரிசில்களையும், பாராட்டுக் களையும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டவர்கள் வழங்கிக் கௌரவித்தனர். தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. இந் நிகழ்வில் வைத்தியசாலை அபி விருத்திச் சபையினரும், வைத்திய ஊழியர்களும், நலன் விரும்பி களும் கலந்து கொண்டு சிறப்பித் தமை குறிப்பிடத்தக்கது. (கு)

# பதவிக்குறைப்பு நடவடிக்கைக்கு உயர் நீதிமன்றம் தடை உத்தரவு

தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக் குழுவின்செயலாளரின் பதவிக் குறைப்பு நடவடிக்கைக்கு எதிராக உயர் நீதிமன்றம் நேற்று தடை உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது. தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் செயலாளராக தற்போது பணியாற்றும் கல்யாணி ஏ .சில்வாவை இந்த ஆணைக்குழுவின் பிரதி ஆணையாளராக நியமிக்க தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் முயற்ச்சிகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இந்த நடவடிக்கை சட்டவிரோதமானது என கல்யாணி ஏ சில்வா உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை நேற்று நடைபெற்றுள்ளது.இந்த விசாரணையின் முடிவில் பணிப்பாளர் சபையின் முடிவை அடுத்த ஆண்டு சனவரி முதல் ஒத்திவைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது (32)

# மன்னாரைச் சேர்ந்த மூவர் கடற்படையினரால் கைது

மன்னார், ஊருமலை கடற்கரையில் ஒரு பெண்ணையும், இரண்டு தமிழ் இளைஞர்களையும் கடற்படையினர் கைதுசெய்துள் ளனர். கடந்த வியாழன் மாலை 4.30 மணியளவில் மன்னார், ஊருமலைப் பகுதியில் - கடற் கரையில் பற்றைகள் நிறைந்த பகுதியில் நின்றிருந்த இவர் களைக் கடற்படையினர் கைது செய்தனர். தாம் இந்தியாவுக்குச் செல்வதற்காகவே குறிப்பிட்ட இடத்தில் அமர்ந்து ட்றோலருக்கா கக் காத்திருந்தனர் என அவர்கள் தெரிவித்துள்ளனர். கைதுசெய்யப் பட்ட இந்த மூவரும் முன்னுக்கு பின் முரணான முறையில் வாக்கு மூலம் அளித்ததால் அவர்கள் மீது தமக்குச் சந்தேகம் ஏற்பட்டது என்றும்

அவர்களைக் கைதுசெய்து தலைமன்னார் காவற்துறை நிலையத்தில் தாம் ஒப்படைத்தனர் எனவும் கடற்படையினர் தெரிவித் தனர். கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் மன்னாரைச் சேர்ந்த வர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (32)

# சந்திரிகாவைப் பாராளுமன்றம் கொண்டுவர விரைவில் சர்வசன வாக்கெடுப்பு

—பிரதி அமைச்சர் அன்வர் இஸ்மாயில்

நிறைவேற்று அதிகார சனாதிபதி முறையை ஒழித்து சந்திரிகா அம்மையாரைப் பாராளு மன்றத்துக்குக் கொண்டுவரு வதற்கான சர்வசன வாக் கெடுப்பு மிகவிரைவில் நடத்தப் படும். அதற்கான ஏற்பாடுகள் மிக விரைவாக இடம்பெற்று வரு கின்றன. இவ்வாறு கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் எம்.ஐ.அன்வர் இஸ் மாயில். வியாழக்கிழமை காலை சம்மாந்துறை நகர மண்டபத்தில் இடம்பெற்ற இரண்டாம் கட்டமாகப் பட்டதாரிப் பயிலுநர் நியமனம் வழங்கு வதற்கான பயிற்சி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டபோது இதனைத் தெரி வித்தார். இந்த நாட்டின் எதிர் காலத்தை வளம் கொழிக்கச் செய்யும் ஏற்பாட்டினை அரசு மேற் கொண்டு வருகிறது. ரணில் விக் கிரமசிங்கவுக்கு சனாதிபதி அதி காரத்தை அனுபவித்துப் பார்க்கும் வாய்ப்புகளே கிடையாதெனப் பிரபல சோதிடர்களின் கணிப் புக்கள் கூறுவதாக சிங்களச் செய்தி ஊடகங்கள் தெரிவித்திருக்கின்றன. ஐ.தே.கட்சி அரசாட்சியின்போது வேலைவாய்ப்பு என்பது முயற் கொம்பாக இருந்தது. பட்டதாரிகள் வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலை ஏற்பட்டது. மற்று மொரு சனாதிபதித்தோதல் 2005. டிசெம்பரில் அல்லது அதற்கு முன்பு வரும். அதற்கும் முன் சர்வ சன வாக்கெடுப்பு நடத் தப்படு மென்று கருதுவதாகவும் தெரி வித்தார்.

# பாராளு. உறுப்பினர்களுக்கு ஒழுக்க நெறிக்கோவை

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒழுக்க நெறிக்கோவை ஒன்றை அறிமுகப்படுத்தவதற்கான தேவை எழுந்துள்ளதாக மகாணசபை உள்ளூராட்சிப் பிரதியமைச்சர் ரணவீர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அரசியல் மிகவும் கீழ் மட்டத்திற்கு வீழ்ச்சிய டைந்துள்ளதாகவும். கொழும்பில் நேற்று இடம் பெற்ற கலந்துரையடல் ஒன்றின் போது தெரிவித்துள்ளார்.

### சிற்றூர்தி...

காயங்களுக்கு உள்ளா னார்கள் இவ்விபத்திற்கு வீதிச் சீரின்மையே காரணம் என மக்கள் விசனம்தெரிவித்துள்ளனர். (மி)

### அரசுக்கு...

இதேவேளை ஐ.தே.கட்சி ஒழுங்குசெய்து வருகின்ற இவ் வாறான போராட்டங்களுக்கு பாரியளவில் மக்கள் [illegible] செல்வதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (32)

### தமிழ்ச்...

வருகின்றது. கொழும்பு கட்டு நாயக்க விமான நிலையத்தைச் சென்றடைந்ததும் விசேட உலங்கு வானூர்தியில் அவர்கள் கிளி நொச்சி புறப்படுவார்கள் எனத் தெரிகின்றது. (32)

### கல்வியை...

வாக்குவதற்குத் தேவையான கல்வி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் கல்வி நிலையங்கள் மாற்றப்பட வேண்டும் என்பதே உலக வங்கியின் நிலைப் பாடு என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (32)

### வவு...

மானது வவுனியாவின் வரலாற்றில் முதல் முறையாக அரசாங்கத்தின் ஏற்பாட்டில் தேசிய ரீதியிலான போட்டி ஒன்றில் சிங்கக் கொடி ஏற்றாமல் நிகழ்வு ஒன்று இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. போட்டிகளில் 25 மாவட்டங்களைச் சேர்ந்த 32 அணிகள் பங்கு பெற்றுவதாக அறி வித்தபோதிலும் அணிவகுப்பில் 18 அணிகளே பங்கு பற்றியிருந்தன இதில் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட அணிகள் அணிவகுப்பில் பங்கெடுக்காமை குறிப்பிடத்தக்கது. நிகழ்வின் ஆரம்பத்தில் வவுனியா நகரசபை மைதான முன்றலில் பிரதம விருந்தினர்கள் மலர் மாலை அணிவித்து அழைத்து வரப்பட்ட சமயம் சடுதியாகக் கடும் மழை பெய்து ஓய்ந்தது. இதன் பின்னர் மங்கல விளக்கு ஏற்றப்பட்டதன் பின்னர் வீரர் களும் நடுவர்களும் உறுதிமொழி எடுத்தனர். நிகழ்வில் வவுனியா றம் பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவர்களின் கலாசார நடனம் இடம் பெற்றது. சிறப்புரையினை வவுனியா மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் வழங்கினர். இந்த நிகழ்வில் வன்னி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பாரமி குலத்துங்க சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் மகிந்த பத்தேவல விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட விளையாட்டுத்துறை பொறுப்பாளர் தமிழ் மாறன் மற்றும் திணைக்கள அதிகாரிகள் பாடசாலை ஆசிரியர்கள் மக்கள் என்று நூற்றுக்கணக் கானோர் ஆரம்பநிகழ்வில் கலந்துகொண்டனர் தொடர்ந்து போட்டிகள் இடம் பெற்றது (21)

### வன்முறை...

உறவினர்களின் இல்லங்களிலும், வாழ்ந்து வருகின்றார்களென மேலும் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்த உடன்படிக் கையை என்ன விலை கொடுத் தாயினும் புலிகள் தொடந்தும் கடைப்பிடிக்க வேண்டுமென ஜேர்ம னியின் இராஜாங்கச் செயலா ளரும், இராஜங்க அமைச்சரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசி யல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் தலைமையி லான குழுவினரிடம் வலிறுத்தி யுள்ளனர். இவ்வகையில் ஆங் காங்கே இடம்பெற்று வரும் கொலைகள் தொடர்பாகத் தமது கவலையைத் தெரிவித்த ஜேர்மன் பிரதிநிதிகள் சமாதானப் பேச்சு வார்த்தைகளைத் தொடர்வதற்கு காத்திரமான நடவடிக்கைகள் எடுக் கப்படாமை குறித்து விசனம் தெரிவித்தனர். போரினால் சீரழிந்து போயுள்ள வடகிழக்கில் மீள்குடி யேற்றம், புனர்நிர்மானம், புனர் வாழ்வு ஆகியவற்றை மேற் கொள்வதற்குத் தமது நாடு ஆர்வம் கொண்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

### இந்...

நிலையை பாதிக்குமென அவர் எச்சரித்துள்ளார். இத்தகைய படைத்துறை ஒப்பந்தமானது புலிக ளுக்கு எதிரான சிறிலங்கா படையி னரின் படைவலு நிலையை உயர்த் துவதனால் தற்போது நிலவும் படை வலு பாதிப்பிற்கு உள்ளாகு மென தெரிவித்துள்ள துடன் இதன் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகளும் பாதிப்பிற்கு உள்ளாகு [illegible]மென தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.